ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 10 - 9 - 88 [இதழ் 10

தருமை ஆதீனம் ஆவணிமூல விழாவில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்



பாண்டிச்சேரி, பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வு நிறுவன இயக்குந
திரு. என். ஆர். பட் அவர்களுக்கு
இண்டைமாலை சூட்டிப் பொன்னாடை போர்த்தி, 'சிவாகம சேகரன்' என்னு
பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி ஆசி அருளல்
23—8—88.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

அண்ணலைப்போ லா'நந்த
மான்மாவிற் குண்டாகில்
எண்ணில் பிறப்பிறப்பை
யெய்துமோ— கண்ணிருளை
ஒட்டாதோ ஆதவனுக்
கொத்தவொளி யுண்டாகிற்
கேட்டாயோ கேட்டிலையேற்கேள்.

— முத்திநிச்சயம் 12

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-9-88 | இதழ் 10

உட்பொருள்

எண் — பக்கம்

1 காசியில் மூன்றுவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் ... 505
2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 511
3 அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம் ... 516
4 Good Progress ... 520
5 அபிராமி அந்தாதி ... 521
6 போதமும் சித்தியும் ... 525
7 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 529
8 அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் ... 534
9 சிறுத்தொண்டர் ... 539
10 செய்திகள் ... 544
11 எதிர்காலம் ... 549
12 பார்வையாளர் குறிப்பு நகல் ... 524
13 கடிதம் ... 528
14 இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-8. ...553

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 10

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ ஆவணி 10—9—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

காசியில் ஸ்ரீ குமரகுருபரர் முந்நூறுவதாண்டு நினைவாக

மூன்றுவது, அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம்

" வினையாததொர் பரிசில்வரு பசுபாச, வேதனை, ஒண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன் னதுசார்பளம்
களையார் தருகதிராயிரம் உடையவ் வவனோடும்
முளையாமதி தவழும் உயர்முதுகுன் றடைவோமே.

— திருஞானசம்பந்தர்.

அன்பு அழைப்பு :

குருவருளும், திருவருளும் துணை நிற்க, தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், உலகளாவிய தனது,மூன்றுவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கத்தை எதிர்வரும் 1988, டிசம்பர் மாதம், 5, 6, 7 திங்கள், செவ்வாய், புதன் கிழமை ஆகிய மூன்று நாள்களில் சைவப்பெருமக்களால் முத்தித் தலமாகக் கருதிப் போற்றப் பெறும் காசி மாநகரில் மிகச்சிறப்பாக

நடத்த விருப்பதை ஞானசம்பந்தம், தனது சைவத் தமிழ்ப்பேரன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறது. உலகெங்கும் வாழும் சைவசித்தாந்தத் தத்துவச் சிந்தனையாளர்களையும் சைவப் பேரன்பர்களையும் கருத்தரங்கத்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கவும், சிறப்புறவும் வேண்டுகின்றோம். ஞானசம்பந்தம் பொதுவாகச் சமய உலகத்தவரையும், சிறப்பாகச் சைவ மெய்யன்பர்களையும் காசிக் கருத்தரங்கிற்கு வருமாறு அன்பான அழைப்பு விடுக்கிறது.

ஆராய்ச்சி நிறுவனம் :

உலகின் தொல்பெருஞ் சமயங்கள் பலவற்றுள்ளும் காலப் பழமையும், சாலப் பெருமையும் கொண்டது நமது சைவப்பெருநெறி என்பதும், உலகில் தோன்றிய சமயஞ்சார்ந்த தத்துவச்சிந்தனைகள் பலவற்றுள்ளும் முதன்மையானது நம் சைவசித்தாந்தச் செந்நெறி என்பதும், விருப்பு வெறுப்பற்ற நடுநிலை வரலாற்று ஆசிரியர்களாலும், தத்துவச் சிந்தனையாளர்களாலும் உறுதிசெய்யப்பெற்ற உண்மைகளாகும். சிவ பரம்பொருளிடமிருந்து உபதேச வழியாய் வந்த வேதாகம நெறியாலும் அகச்சந்தானக் குரவர்களாலும், புறச்சந்தானக் குரவர்களாலும் வழி வழியாய்ப் போற்றி வளர்க்கப் பெற்று வந்த சைவசித்தாந்த உயர்நெறியை, கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதலாகக் கண்ணெனக் காத்து வளர்த்து வரும் சிவஞானப் பண்ணை நமது தருமை ஆதீனம் என்பதைச் சைவ உலகம் நன்கறியும், இவ்வுன்னதப் பெருநெறி குன்றின் மேல் விளக்காக, இருந்து வருகிறது. இதனை மலைமீதுள்ள விளக்காக உலகறியச் செய்ய, தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 28—11—1984 இல் தொடங்கியருளிய தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் முறையாகப் பன்முக வளர்ச்சி பெற்று, இவ்வாண்டின் இறுதியில் மூன்றாவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கை மிகச்சிறப்பாக நடத்த ஆவன அனைத்தும் செய்து வருகிறது.

பன்முகப் பணிகள் :

தருமை ஆதீனம், அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தைப் பெரும் நிலைநிதி நிறுவித் தோற்றுவித்து, புரந்தருளும் தருமைக் குருமணி அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் நிறுவனம் பன்முக – சைவ சித்தாந்த வளர்ச்சிப் பணிகளில் முனைப்பாக ஈடுபட்டு வளர்த்தும், வளர்ந்தும் வருகிறது. சைவசித்தாந்தத்தை உலகில்தோன்றிய பிறகொள்கைகள் மற்றும் மதங்களோடு ஒப்பாய்வு செய்து நூல்கள் வெளியிடுதல் பிற மொழியிலுள்ள அரிய நூல்களைத் தமிழிலும், தமிழில் உள்ள உயர் நூல்களைப் பிறமொழிகளிலும் பெயர்த்து வெளிப்படுத்துதல்,

ஏடுகளையும் வெளியிடப் பெறாத கைப்பிரதிகளையும் பதிப்பித்தல்; சமயஞ்சார்ந்த அருங்காட்சியகம் நிறுவுதல்; இதழ்வழி சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்; நாடெங்கும் மாலை நேர சைவசித்தாந்தக் கல்லூரிகளை அமைத்தல்; மாநில அளவில், தேசிய அளவில், உலகளாவிய அளவில் கருத்தரங்குகள் நடத்தி ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுதல், காலாண்டுச்செய்திமடல், அரையாண்டுச் செய்திமடல் வெளியிடுதல் முதலிய பணிகளைத் திட்டமிட்டு நிறுவனம் இயற்றி வருவதைத் தொடர்புடையவர்கள் நன்கு அறிவர்.

முதல் கருத்தரங்கம் :

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகளாவிய கருத்தரங்கினை வெவ்வேறு நாடுகளில் நடத்துதல் என்று எடுக்கப்பட்ட முடிவின் வண்ணம், நிறுவனத்தின் முதல் கருத்தரங்கம் தருமையில் 1984, மே மாதம் 11, 12, 13 ஆகிய மூன்று நாள்கள் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தப் பெற்ற இக்கருத்தரங்கில், உலகெங்கிலுமிருந்து எண்பது அறிஞர்கள்பங்கேற்றனர். தமிழிலும் ஆங்கிலத்திலுமாகப் பதினான்கு நூல்கள் வெளியிடப்பெற்றன. ஆய்வுக் கட்டுரைகளும் பகுதிகளாக அச்சிட்டு வழங்கப்பெற்றன. தத்துவ அறிஞர்கள் பட்டமளித்துப் பாராட்டப் பெற்றனர்.

இரண்டாம் கருத்தரங்கம் :

இரண்டாவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம் 1986 நவம்பர் மாதம் 14, 15, 16 ஆகிய நாள்களில், மலேசிய நாட்டின் தலைநகரமாகிய கோலாலம்பூரில் மிகச்சிறப்பாக நடத்தப் பெற்றது. மலேயா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரும் அந் நாட்டுத் தமிழ் அமைச்சர்களும் பல்வேறு சமய நிறுவனத்தினரும் சிறப்பாக இக்கருத்தரங்கினை நிகழ்த்தத் துணைநின்றனர். பல்வேறு கிளை, மேலைநாட்டு அறிஞர்கள் அறுபதுபேர் பங்கேற்றுத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் வழங்கினர். பன்னிரண்டு அரிய நூல்கள் வெளியிடப்பெற்றன. பார்வையாளராக அறிஞர்கள் பலர் பலநாடுகளிலிருந்தும் வந்திருந்தனர். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களும் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களும் பங்குபற்றிக் கருத்தரங்கினைச் சிறப்பித்தார்கள்.

தருமையும் காசியும் :

காசி இந்துக்களின், சிறப்பாகச் சைவர்களின் புனிதத்தலங்களுள் ஒன்றாக நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. பழந் தமிழ் இலக்கியங்கள் இதனை வருணை, அசி என்ற இருநதிகளின்

நடுவில் அமைந்திருப்பதால் வாரணசி எனக் குறிக்கிறது. தேவார ஆசிரியர்கள் இத்தலத்தை ஒரு வைப்புத்தலமாக "வாரணசி" எனப் போற்றியுள்ளனர். காசி, சைவர்களின் ஐந்து முத்தித்தலங்களுள் இறக்க முத்தி தரும் தலமாகப் போற்றப்படுவது. தருமை ஆதீனம் நாலாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக மூர்த்தி களின் சீடராகிய ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளைக் காசி யாத்திரை மேற்கொள்ளப் பணித்தருளினர்கள். அதன் நோக்கமே கங்கைக் கரையில் சைவசித்தாந்தம் பரவவேண்டும் என்பதுதான் என்பர். அதன்படியே காசிசேர்ந்த ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கலைமகள் அருள்பெற்று, கங்கைக்கரையில் கேதாரக் கட்டத்தில் குமாரசாமி மடத்தை நிறுவினர்கள். அத்தலத்திறைவனைச் சிறப்பித்துக் காசிக் கலம்பகம் அருளினர். காசியில் நிறுவப்பட்ட குமாரசாமிமடம் பிற்காலத்தில் தஞ்சைமாவட்டம் திருப்பனந்தாளில் ஸ்ரீ காசி மடமாக உருப்பெற்றுத் தருமை ஆதீனத்தின் சிஷ்யமடமாக நிலவி வருகின்றது. தருமை ஆதீனம் பத்தாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் காசி தலத்து இறைவர்கள் மேல், நூல்கள் அருளிச்செய்துள்ளார்கள். தருமை 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் காசியில் பரிபூரணம் எய்தினர் கள். தருமை ஆதீனத்தில் துறவுநெறி மேற்கொள்பவர் காசி யாத்திரை மேற்கொள்ளப் பணிக்கப்பெறுவர். காசியோடு தருமைக் குள்ள உறவு நெருக்கமானது. இது கருதியே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நினைவாக மூன்ருவது கருத்தரங்கம் ஸ்ரீ குமரகுருபரர் வாழ்ந்து சைவசித்தாந்தம் பரப்பிய ஸ்ரீ காசியில் நிகழ்த்தப் பெற வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றினர்கள்.

மூன்ரும் கருத்தரங்கம் :

தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தனது உலகளாவிய மூன்ருவது கருத்தரங்கினை 1988 டிசம்பர்மாதம் 5, 6, 7 தேதிகளில் கங்கைக்கரையில் காசிமாநகரில் மிகச் சிறப்பாக நடத்த அனைத்து ஏற்பாடுகளையும் முனைப்பாகச் செய்து வருகிறது. நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இக் கருத்தரங்கில், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைமைத் திருமடமாகிய ஸ்ரீ குமாரசாமிமடம், காசி இந்து பல்கலைக்கழகம், காசி சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் - காசி வித்தியாபீடப் பல்கலைக் கழகம் முதலிய கல்வி அறநிலையங்கள் பெரும்பங்கு வகிக்க முன்வந்துள்ளன. கருத்தரங்கம் தமிழ், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் நடைபெற ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. உலகெங்கிலுமிருந்து ஏறத்தாழ நூற்றுக்கு

மேற்பட்ட சமய - சாத்திர அறிஞர்கள் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

காசியில் நடைபெறவிருக்கும் இம்மூன்றாவது கருத்தரங்கில் காசி சமஸ்கிருதப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியச் திரு. வேங்கடாசலம், பேராசிரியர் திரு. வி. எஸ். பதக், காசிவித்யா பீடப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு. வித்யா நிவாஸ் மிஸ்ரா, காசி இந்து பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஆர். பி. ரஸ்டோகி ஆகியோர் பங்கேற்கின்றனர். மற்றும் தமிழகப் பல்கலைக் கழகங்களில் தத்துவத்துறையில் பணியாற்றும் அறிஞர்கள், பாண்டிச்சேரி, இந்திய - பிரஞ்சு கலாசார நிறுவன அறிஞர்கள், லக்னோ பல்கலைக் கழகம், கோரக்பூர் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலர் பங்குபற்றுகின்றனர். சிறப்பாக கானடாவில் உள்ள டாக்டர் கே. சிவராமன், பேராசிரியர் திரு. தேவசேனாபதி, திரு. டி. பி. சித்தலிங்கையா, திரு. என். ஆர். பட், டாக்டர் ஆர். ஆர். பாண்டே, டாக்டர் சபாரத்தினம், டாக்டர் கைலாஷ்பதி திரிபாதி, டாக்டர் கமலாகார்மிஸ்ரா, திரு. என். ஆர். மார்க், திரு. ஹேமந்தரநாத் சக்ரவர்த்தி, டாக்டர் ரமாகோஷ், டாக்டர் எல். என். சர்மா, டாக்டர் நவஜீவன் ரோஸ்டகி, டாக்டர் வி எஸ். பதக் முதலிய சமய தத்துவ அறிஞர்கள் பங்கேற்க இசைவு தந்துள்ளனர்.

உத்தேசத் திட்டங்கள் :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர் 'கயிலைமாமுனிவர்' ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும், காசி மகாராஜா (டாக்டர். ஸ்ரீ விபுதி நாராயண் சிங்) அவர்களும் முற்குறித்த மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களும் கருத்தரங்கில் பங்கேற்கின்றனர். கருத்தரங்கம் சைவசித்தாந்தத்தைப் பிற வடபுல சமய சித்தாந்தங்களோடும், உலகின் பல்வேறு சமய சித்தாந்தங்களோடும் ஒப்பாய்வு செய்து உண்மை காணும் நோக்கில் அமையும். தற்போதைய திட்டத்தின்படி தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் சிந்தனைத் தொகுப்பான திருவருட்செய்தி - மூன்றும் தொகுதி (தமிழ்) சைவ சித்தாந்தம் - தொகுதி-2 (ஆங்கிலம்) பதி, பசு, பாசம் (ஆங்கிலம்) தருமை ஆதீனப் பட்டயங்கள் (தமிழ்) ஆகிய நூல்களுடன் திருமூலர் திருமந்திரம் உரையுடன் (தருமை ஆதீனம் பதிப்பு 7, 8, 9 ஆம் தந்திரம் மூன்றும் தொகுதி) கருத்தரங்கில் வெளியிட ஏற்பாடாகி வருகிறது. ஏறத்தாழப் பதினைந்து நூல்கள் வெளிவரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேராளர்களுக்கு :

கருத்தரங்கில் பங்கேற்று, பேராளர்களாகக் கட்டுரை வழங்க விரும்புவோர், பேராளர் கட்டணமாக ரூபாய் 100. (ஒரு நூறு) 15—10—1988 க்குள் இயக்குநர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம் மயிலாடுதுறை - 609001, தமிழ் நாடு என்ற முகவரிக்குப் பணவிடை (M. O) அல்லது வரை வோலை (D/D) வாயிலாகச் செலுத்திப் பதிவு செய்து கொள்ள வேண்டும். கட்டுரைகள், இயக்குநரின் ஒப்புதல் பெற்று, உரிய தலைப்பில் எழுதித் தட்டச்சுச் செய்து 25—10—88 க்குள் வழங்கப் படவேண்டும். காசியிலிருந்து கருத்தரங்கம் நிறைவு பெற்ற பிறகு சென்னை திருப்ப, பேராளர்கள் ரூபாய் இருநூறு, தொடர்வண்டி முன்பதிவுக்காக, மேலாளர் ஸ்ரீ குமாரசாமிமடம், கேதாரக்கட்டம், வாரணசி, உத்திரப் பிரதேச மாநிலம் என்ற முகவரிக்கு அனுப்பி, முன்பதிவை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதன் விபரம் நிறுவனத்திற்கும் எழுத்து வாயிலாகத் தெரிவிக்கவேண்டும்.

நிகழ்ச்சி முன்னேட்டம் :

5—12—88 காலை, சமஸ்கிருதப்பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கம் சமஸ்கிருத மொழியிலும், அன்று பிற்பகல் அங்கேயே ஆங்கிலத் திலும், 6—12—88 காலை காசி வித்யா பீடத்தில் இந்தியிலும், பிற்பகல் ஸ்ரீகுமாரசாமிமடத்தில் தமிழிலும் 7—12—88காலை, காசி இந்து பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்திலும், பிற்பகல் அங்கேயே தத்துவத்துறையில் ஆங்கிலத்திலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. விரிவான கருத்தரங்க நிகழ்ச்சி அறிக்கையும் கருத்தரங்கம் பற்றிய இரண்டாவது அறிவிப்பும் அடுத்து வரும் ஞானசம்பந்தம் இதழ்களில் முறையாக வெளிவரும்.

பங்கேற்க வாரீர் !

மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் பரவ, திருமைக் குருமணி அவர்களின் அருளாசியுடன் நடைபெறவுள்ள மூன்ருவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கில் உலகெங்கும் வாழும் தத்துவச்சிந்தனையாளர்களும், சமய அறிஞர்களும், சைவப் பேரன்பர் களும் சித்தாந்தச் செல்வர்களும் பங்கேற்றுச் சிறப்பிக்க ''ஞானசம்பந்தம்'' அன்புடன் அழைக்கிறது. வருக வருக என வரவேற்கிறது.

மக்கள் மகிழ்ந்திட, மாணருள் பெற்றிட வாரீர் வாரணசிக்கு!
சைவம் தழைத்திட, தண்ணருள் பெற்றிட வாரீர காசிக்கு!
சமயம் வளர்ந்திட, தண்ணருள் பொங்கிட வாரீர் கங்கைக்கு!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம் ஆதீனக் கலைக் கல்லூரி
பி. காம்., வகுப்புத் தொடக்க விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

4—9—1988

" சீரணியும் நுதலின் விழி மழுமான் நாகம்
திருந்தும் எரி பொருந்து விடம் தெரிந்திடாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக் கணுளன்
பாரணியும் ஞானசம்பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம் "

மொழியும் கருத்தும் :

மொழி என்பது கருத்தை விளக்கவந்த ஒரு கருவி ஆகும். எனவே, மொழி என்பதை உடலாகக் கொண்டால் கருத்து என்பது உயிர் எனலாம். எல்லாச் சொல்லும் பொருள் குறித்து வந்தனவே என்பது போலவும், எல்லாச் சமயங்களும் உயிர்களை ஈடேற்றம் பெறச் செய்ய வந்தனவே என்பது போலவும் உலகில் தோன்றிய எல்லா மொழிகளும் கருத்துவளம் மிக்கனவே என்று ஏற்றுப் போற்ற வேண்டுவது ஒவ்வொரு மொழியாளர்க்கும் கடமையாகும். ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு துறையில் கருத்துவளம் மிக்கது என்பது முன்னோர்கள் கண்ட முடிபு. ஆங்கிலமொழிவாணிகத்திற்கும், இலத்தீன்மொழிசட்டத்திற்கும், பிரெஞ்சுமொழி தூதிற்கும், கிரேக்கமொழிகாதலுக்கும் சிறந்தன என்பது போலத் தமிழ் மொழி பக்திக்குச் சிறந்தது என்றும்

சம்ஸ்கிருதமொழி தத்துவத்திற்குச் சிறந்தது என்றும் மொழியறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆதீனக் கல்விப்பணி :

இத்தகைய பக்திப் பண்பாடுமிக்க தமிழையும் தத்துவ வளம் மிக்க சம்ஸ்கிருதத்தையும் இருகண்கள் எனப் போற்றி வளர்த்து வருவது நமது தருமை ஆதீனம். பக்தி நெறிக்கும், தத்துவ நெறிக்கும் அடிப்படையாகிய திருக்கோயில் வழிபாட்டினை முறையாக மேற்கொள்ளச் செய்யும் சிவாசாரியர்களை உருவாக்குவதற்கு ஆகமப்பாடசாலையும், திருக்கோயில்களில் திருமுறைப் பாடல்களை முறையாக ஓதுவதற்குரிய ஓதுவார்களை உருவாக்குவதற்குத் தேவாரப் பாடசாலையும் இத்தருமை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் அருளாட்சிக்காலத்தில் 1940 இல் தொடங்கப் பெற்றன. இவற்றில் கற்றுத் தேர்ந்த பன்னூறு மாணவர்கள் இன்று நாடெங்கிலும்சென்று சிவாசாரியர்களாகவும் ஓதுவாமூர்த்திகளாகவும் பணி புரிந்து பக்தியையும், தத்துவத்தையும் வழிபாட்டுணர்வையும் வளர்த்து வருகின்றனர்.

அடுத்து மொழி வளர்ச்சிக்கும் அதன் வழியே சமயம், தத்துவம், பக்தி முதலிய வளர்ச்சிக்கும் பயன்படும் வகையில் 25 - வது குருமகாசந்நிதானம் அருளாட்சிக் காலத்தில் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, 2—8—1946 இல் தொடங்கப்பெற்றது. இதில் சென்னைப் பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் தமிழ் வித்துவான் வகுப்பும் வடமொழி சாகித்திய சிரோமணி வகுப்பும் நடத்தப் பெற்றன. காலப்போக்கில் வகுப்பில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து விட்டதால் சிரோமணி வகுப்பு மட்டும் நிறுத்தப் பெற்றுள்ளது.

புதிய வகுப்பு :

வேலைவாய்ப்பு இன்மையால் தொடர்ந்து நடந்து வந்த வித்துவான் வகுப்பிலும் மாணவர்கள் எண்ணிக்கை குறைவதாயிற்று. தமிழகத்திலுள்ள பல தமிழ் அறிஞர்களின் முயற்சியினால் டைட்டிலாக இருந்த வித்துவான் வகுப்பைச் சென்னைப் பல்கலைக் கழகம் 1975 இல் பி. லிட்., என்ற பட்டவகுப்பாக மாற்றியது. அதன் பிறகு 1980 இல் தமிழ் முதுகலை (M. A. தமிழ்) வகுப்பும், தமிழ் ஆய்வியல் நிறைஞர் வகுப்பும் (M. Phil - தமிழ்) 1985 இல் ஆரம்பிக்கப்பெற்றன.

பி. லிட்., எம். ஏ., எம். ஃபில், என்னும் தமிழ் (பட்டம்) வகுப்புக்கள் பலவும் தொடங்கப் பெற்ற பின்னும் வேலை வாய்ப் பின்மை காரணமாக மாணவர்களின் சேர்க்கை குறைந்துகொண்டே வந்தது. இனி, காலப்போக்கிற்கு ஏற்ப, பிறதுறை வகுப்புக்களை யும் ஆரம்பித்து இக்கல்லூரியைக் கலைக்கல்லூரியாக மாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது. பாரதிதாசன் பல்கலைக் கழகம் அங்கீகாரமும் அளித்துள்ளது. இவ்வாண்டு (1988-89) இளங்கலை வணிகவியல் வகுப்பு (B Com.,) தொடங்கப்பெற்றுள்ளது.

கல்வி - கலை விளக்கம் :

இங்குக் கல்வி, கலை என்னும் சொல்பற்றிச் சிந்திப்பது பொருத்தமாகும். கல்+வி=கல்வியாகிறது. கல்லுதல், தோண்டு தல். நமது அறிவை மறைத்திருக்கின்ற அழுக்கை - படலத்தைக் கல்வி அகற்றினால் அறிவு பிரகாசிக்கும். அறிவை ஒளியாகவும், அறியாமையை இருளாகவும் காண்போம். வி-என்ற விகுதி விளக்கத்தைக் குறிக்கின்றது. இதனால்தான் திருவள்ளுவரும் தோண்டுதற்கேற்பக் கேணியில் நீர் ஊறுவதுபோல் கல்லுதலுக் கேற்ப அறிவு விளக்கமுறும் என்று கூறுகிறார்.

" தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு "

என்பது திருக்குறள்.

கலையும் இப்படித்தான் கல்+ஐ=கலை, கல்லுதலால், உயர்ந்த அறிவு தோன்றும், ஐ என்பது உயர்வையும் தலைமையையும் குறிக்கும். கல்வி என்பது தொடக்க, உயர்நிலைக் கல்வியையும், கலை - கல்லூரிக் கல்வியையும், குறிப்பதாகக்கொள்ளலாம். அறிவு ஒன்றாக இருந்தாலும் அது நம்மை நோக்கப் பலவாக விரிகிறது. கடவுள் ஒருவரே யாயினும் நம்மை நோக்கப் பலவாயிருப்பது போல் வரலாற்றறிவு, கணக்கியல் அறிவு, விலங்கியல் அறிவு, தாவரஇயல் அறிவு, மருத்துவஇயல் அறிவு அதிலும் மூளைஇயல், நரம்பியல், இருதயவியல், கண், காது, மூக்குஇயல் அறிவு எனக் கலையறிவு பலதிறப்படுகிறது. வயிரக்கல் ஒன்றே பட்டைதீட்டுவதற் கேற்பப் பலநிற ஒளிவீசுவதுபோல் நாம் எத்தனைக் கலைகளைக் கற்கிறோமோ அத்தனைத்துறையிலும் அறிவு விளக்கம் பெறுகிறோம். ஆனால் ஒன்றிரண்டு கலைகளுக்குமேல் கற்கும் ஆற்றல் நமக்கு இருப்பதில்லை. கடவுள் ஒருவரே எல்லாக் கலைகட்கும் உரியவர். அவர் அறிவே வடிவானவர் அல்லவா?

இதனால்தான் பெரியோர்கள் கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்றும், கலையின் எல்லை கடவுளே என்றும் கூறிப் போந்தனர். "கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாள் தொழுதல்" என்று வள்ளுவர்கூறினர். "உள்ளம் நிறைகலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றின் தெள்ளிவடித்து அறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்று சிறுத்தொண்டர் உணர்ந்து ஒழுகியமையையும், "அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங்கழலே" எனத் தெளிந்து ஆமேய்த்து அரன் பூசனை புரிந்த சண்டீசர் வாழ்வியலையும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

இறையருள் பொருத்தம் :

இங்கு மாதந்தோறும் முதல் ஞாயிறன்று நடைபெற்று வரும் பெரியபுராணச் சிந்தனைத் தொடர் நாளாகிய இன்று, இவ் வகுப்புத் தொடக்கமும் இணைந்துள்ளது. இன்று சிந்திக்க வேண்டியது சிறுத்தொண்டர் வரலாறாகும். இதில் எதிர்பாராத நிலையில் ஒருபாடல் இன்றைய வகுப்புத் தொடக்கத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. இது இறைவன் திருவருள். சிறுத்தொண்டர் பல்வேறு கலைகளையும் கற்றுத் தேர்ந்தார் என்று கூறவந்த சேக்கிழார், கலைகளைக் கற்று உணர்ந்ததோடு அக்கலைகளின் முடிந்த பயனாகிய இறைவன் திருவடிச் சிந்தனையையும் அவர் மேற்கொண்டு வாழ்ந்தார் என்று தெளிவுறக் கூறுகிறார்.

" உள்ளம்நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலில் செறிவு என்றே
கொள்ளும் உணர்வினில் முன்னே கூற்றுதைத்த கழற்கு அன்பு
பள்ளமடையாய் என்றும் பயின்றுவரும் பண்புடையார் "

என்று மொழிகிறார். இக்கருத்தையே சண்டேசுவர நாயனார் வரலாற்றிலும் விளக்கிக்கூறுகிறார். அலகில் கலைகளின் பொருளுக்கு எல்லையாக இருப்பது நடனமிடும் பெருமானின் திருவடிக் கழல்களே என்கிறார்.

" அலகில் கலையின் பொருட்கெல்லை
ஆடும் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில
தெளிந்தார் சிறிய பெருந்தகையார் "

என்பது சேக்கிழார் வாக்கு. இக்கருத்தில் திருவள்ளுவரும் முன்னதாகவே, 'வாலறிவன் நற்றாள் தொழார் எனின், கற்றதனால் ஆய பயன் என்?' என்று கேட்கிறார். மாணக்கர்கள் எந்தக்கலைத்துறைப் பாடங்களைப் பயின்றாலும் இறைவன் திருவடியில் பற்று வைத்துப்

பயில்வதேபண்பாடு, அப்பண்பாட்டையே பாதையாகக்கொண்டு பயில வேண்டும். எந்தக் கலைக்கும் இறைவனே முதலும் முடிவு மாகியிருப்பவன் என்றுணர்தல் அவசியம். வணிகம், இலக்கியம், கணிதம், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விலங்கியல், தாவரஇயல் போன்ற கலைத்துறைப் பாடங்கள் இம்மை வாழ்வை மேம்படுத்த வந்தவை. இப்பாடங்களைப் பயிலும்போது அவ்வ வற்றின் உள்ளீடாக நீங்காது உள்ள இறைத்தன்மையையும் பண்பாட்டு நிலையினையும் உணர்ந்து, பக்தி நெறியோடு வாழ்தல் மறுமைக்கும் பயன்தரும். இவற்றைக் கருத்தில் கொண்டு நல்ல முறையில் பயின்று மாணவர்கள் நலமுறுவார்களாக.

கல்வி கற்போர் பிரமசாரியாக இருக்கவேண்டும் என்பது நமது நாட்டுமரபு. இதனையே மேலைநாட்டினரும் கொண்டுள்ளனர் என்பது B. Com; B. A., B. E., B. Sc., முதலிய பட்டங்களால் தெரியவருகிறது. பேச்சிலர் ஆப் காமர்ஸ், பேச்சிலர் ஆப் ஆர்ட்ஸ், பேச்சிலர் ஆப் எஞ்சினியரிங், பேச்சிலர் ஆப் சயின்ஸ் என்னும் பட்டங்கள் இதனை உணர்த்துகின்றன.

வாழ்த்து :

இன்று B. Com., வகுப்பினைத் தொடங்கிவைக்க இங்கு வந்துள்ள அன்பர், செந்தமிழ்ச் செல்வர், திரு. ம. வே. ஜயராம அய்யர் அவர்கள், பெங்களூரில் பல்கலைத்துறைப்பட்டப் பாட வகுப்புக்களை நடத்தி வரும் கல்லூரிகளின் நிறுவனர் ஆவார். தமிழும் தமிழிசையும் கைவந்த கலை வல்லார். தமிழைப் பயின்று, அயல் மாநிலத்தில் கலைகளைக் கற்பித்துக் கொடுக்கும் இவர், இதன்வழி இம்மைப்பயனை ஈட்டியும் பல புண்ணியச் செயல்களைச் செய்வதனால் மறுமைப் பயனுக்குரிய வழியினைத் தேடியும் வருபவர். அவரின் கையால் தொடங்கப் பெறும் இவ்வகுப்பு நலமுற வளர்ந்து சிறக்கும் என்பது உறுதி. திருவாளர் ஜயராம அய்யர் அவர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" நிலைமை சொல்லு நெஞ்சே தவம்என் செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடுதுறை யன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே. " — அப்பர்.

அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி.

இந்தியத் தத்துவச் சிந்தனையாளர்களுள் அப்பரடிகளுக்குத் தனித்த ஒரு பேரிடமுண்டு. சாலப்பெருமையும், காலப்பழமையும் கொண்ட சைவ சமயத்தின் தூண்களுள் ஒருவராக எண்ணத்தக்க பெருமைபடைத்தவர் அவர். கி. பி. 7 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த அப்பரடிகள் சமயவாழ்வு என்பது, சமூகநலம்பேணுவதற்கு ஓர் அடித்தளம் என்று வாழ்ந்து காட்டியவர். அவரது அழகிய தேவாரப்பனுவல்களும், அதில் காணக்கிடைக்கும் ஆன்மீகச் சிந்தனைகளும் முற்றிலும் புரட்சிகரமாக அமைந்தன. அப்பரடிகளின் நீண்ட பெருமிதவாழ்க்கை, தமது ஆன்மீகச் சிந்தனைகளைத் தன்மேல் வைத்தே வாழ்ந்து காட்டிய ஒருசத்திய சோதனையாகவே அமைகின்றது. அவரது வாழ்வாலும், வாக்காலும் இந்தியத் திருநாடுபெற்ற ஆன்மீகச் செல்வத்தைப் புதிய கண்ணோட்டத்தில் ஆராயும் முயற்சி மகிழ்ச்சியைத் தருகிறது.

'ஆன்மீகம்' என்றசொல் தத்துவ நூலாசிரியர்களிடையே ஆன்மாவின் - உயிரின் ஈடேற்றம் குறித்த ஒருகோட்பாடு என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகிறது. இறைவழிபட்ட, சமயநெறி நின்று உயிரின் ஈடேற்றம் குறித்து, ஆராயும் 'தத்துவ ஆய்வு' என்ற பொருளில் ஆன்மீகம் என்ற சொல்லை இங்கே நாம்ஆள இயலாது. அத்தகு நுட்பமான ஆய்வு - சைவத்துறையில் கி. பி. 7 ஆம் நூற்றுண்டில் உருப்பெற்றிருக்கவில்லை. எனவே அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வமென்பது ஒரு சமயச் சான்றோர் - இறைநெறி நின்று உலகவர்க்கு விடுத்த ஓர் அருட்செய்தி என்ற பொருளிலேயே ஆராயப்படுகின்றது. அப்பரடிகள் சைவசமய நெறி நின்று மக்களின் ஈடேற்றம் குறித்து வழங்கிய நற்செய்திகளே அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வமாக விரிகின்றது

காந்தியடிகள் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமையேற்க வந்தகாலை அவரது வருகைக்கு நல்வரவு கூறுகின்ருர் மகாகவி பாரதியார். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியத் திருநாடு தாழ்ந்துகிடந்த நிலை எத்தகையது என்பதை அவர் கவிதை ஒன்று வேதனையோடு விரிக்கின்றது. "இந்த வையத்து நாட்டில் எல்லாம் தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரததேசம்" - என்று காந்தி

யடிகளின் தொண்டுக்குக் களமாய் அமைந்த பாரதத்தின் நிலை பாரதியாரால் படம்பிடிக்கப்படுகின்றது. ஏறத்தாழ 20 ஆம் நூற்றாண்டில் நிலவிய அதேநிலை அப்பரடிகள் அவதரித்த கி. பி. 7ஆம் நூற்றாண்டிலும் நிலவியமையைவரலாற்றாய்வுகள்தெளிவுபட விரித்துரைக்கின்றன.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் வடக்கிலும், தெற்கிலும் நாட்டை மன்னர்கள் ஆண்டார்கள் என்றாலும் மன்னர்களைச் சமயவாதிகள் ஆட்டிப்படைத்திருந்தனர். மக்கள் வழிபாட்டு உரிமையையும் கூட இழந்திருந்தனர். தமிழ் வழக்கு ஒழிந்து அயல் வழக்குகள் தலைநிமிர்ந்தன. காலகாலமாகப் பேணிக்காத்த தமிழ்நாட்டுக் கலைகள் காமத்தைத் தூண்டுவன எனக் காரணம் காட்டப்பெற்று, ஒடுக்கப்பெற்றன. பெண்மை பெரிதும் இகழப் பட்டது. 'எல்லாம தாழ்வுற்று'- என்ற பாரதியாரின் தொடரிலே காணப்படும் நிலை அன்றே தமிழகத்தில் நிலவியிருந்தது. அரசியல் வாழ்விலும், சமய வாழ்விலும் தனிமனித உரிமை என்பது முற்றாகப் புறக்கணிக்கப் பெற்றிருந்தது. ஒரு அருளாளரின் தொண்டுகளை அவர் வாழ்ந்திருந்த காலப் பின்னணியோடு ஆராய்ந்தால்தான் அதன் சீர்மை நன்கு விளங்கும். அப்பரடிகளின் வாழ்வியலை உற்று நோக்கி ஆராய்ந்தால், சமயம் சார்ந்த ஒரு சமூகப்புரட்சிக்கு வித்திட்டவர் அவர் என்பது பட்டாங்குவிளங்கும். அவர் நிகழ்த்திய உன்னதமான போராட்டக் கூறுகளில் காந்தியடிகள் நிழலாடுவது தெரிகின்றது.

அரசின் தலைவன் மன்னன். அவன் அமைச்சர்களின் துணை கொண்டு சமூகச் சட்டங்களின் வழி நாட்டை நடத்திச்செல்லும் கடமையுடையவன், அதேபோல் இறை நெறிப்பட்ட அறங்களை வற்புறுத்தி, ஆன்மீக நெறியில் மக்களை நடத்திச்செல்லும் கடமை ஆன்மீகவாதிகளுக்கு உரியது. அரசு சட்டத்தின் துணைகொண்டு மக்களின் புறவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. சமயம் அறத்தின் துணைகொண்டு மக்களின் அகவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. இவை இரண்டுமே மக்களை நெறிப்பட வாழ வைக்க இன்றியமையாதன.

தன்னுரிமை உடைய அரசும், சமயமும் ஒன்றிலொன்று குறுக் கிடாது தத்தம் கடமைகளை இயற்றும்வரையில் பிரச்சனைகள் எழுதல் இல்லை. மாறாக அரசு சமயத்தை நசுக்கித் தன்வயப்படுத்த முயன் றாலோ அல்லது சமயம் அரசை மயக்கி ஆட்சி கொள்ளத் தலைப் பட்டாலோ நிலைமை சீர்குலைகிறது.

அப்பரடிகள் அவதரித்த காலத்தில் - வடக்கே பல்லவநாடும் - தெற்கே பாண்டியநாடும் முற்றாகச் சமயப் பிடியில் சிக்குண்டு கிடந் தமையைச் சேக்கிழாரின் பெரியபுராணம் தெளிவுபட அகச்சான்று

களுடன் எடுத்துரைக்கின்றது. சமயம் அரசைத் தன் வயப்படுத்திக் கொண்டபிறகு சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அப்பரடிகள் சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தில் சேர்ந்தபோது எவ்விதஎதிர்ப்பும் சிவநெறியாளர்களால் எழுப்பப் பெறவில்லை. பல ஆண்டுகளுக்குப்பிறகு அவரே சைவம் திரும்பியகாலை சார்ந்திருந்த சமணசமய குருமார்களின் தூண்டுதல் களால் மன்னன் அவருக்குக் கொடிய தண்டனைகளை வழங்குகிறான். எனவே ஒருசமயம் அரசச் செல்வாக்கைப் பெற்றால் ஏனைய சமயங் களின் உரிமைகள் பறிக்கப்படும் என்பதும், தாம் விரும்பிய சமய வாழ்வை மேற்கொள்ள உரிமை மறுக்கப்படும் என்பதும் நன்கு புலனாகின்றன.

நனிநாகரிகக் குடியாட்சி நாடுகள் மதச்சார்பற்ற அரசாகச் செயல்படுவதன் நோக்கம் எவ்வளவு உன்னதமானது, உரிமை சார்ந்தது என்பது இவற்றின் வாயிலாக உணரப்படுகின்றன.

அப்பரடிகள் பிறந்தகாலை மருள்நீக்கியார் எனப்பெயர் சூட்டப் பெற்றவர். சமணம் சார்ந்து, கற்பன கற்று, வாதங்களில் வென்று தலைமைபெற்ற காலை வழங்கப்பெற்ற பெயர் தருமசேனர் என்பது. பல்லாண்டுகள் சமணசமயத் தலைமை பூண்டிருந்த அப்பரடி கள்,தாய்ச்சமயமாகிய சைவசமயமயத்திற்கு மீள்கின்றார்.இறைவன் அசரீரியாக 'நாவுக்கரசர்' என்ற நாமத்தைச் சூட்டியருள்கின்றார். ஏனைய சமணக் குருமார்களின் தூண்டுதல்களால் சினம் கொண்ட பல்லவ மன்னன், மதம்மாறியதற்காக அப்பரடிகளைத் தண்டிக்க அழைத்துவருமாறு அரசியல் சுற்றத்தார்க்குக் கட்டளை இடுகிறான். கட்டளை இட்டவன் அரசியல் சுற்றத்தாரை நோக்கி 'அழைத்து வரச்செல்லும் நீங்கள் சென்ற இடத்தில் ஏதேனும் பொருளைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு விட்டுவிடாது கட்டாயமாகப்பற்றி வாருங்கள்' என எச்சரிக்கிறான்.

> ''தெருள் கொண்டோர் இவர் சொன்ன
> தீயோனைச் செறுவதற்குப்
> பொருள் கொண்டு விடாது என்பால்
> கொடுவாரும் எனப்புகன்றான்.''

சேக்கிழார் பதிவு செய்யும் இத்தொடர் அக்காலத்தில் நிலவிய சமூகச் சீரழிவை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இத்தகு சூழ்நிலையில் அரசனையோ - சமயவாதிகளையோ - அரசியல் சுற்றத் தார்களையோ எதிர்த்துக் கேட்கும் துணிவைச் சமூகம் பெற்றிருக்க வில்லை. சீர்கேடுகளை எதிர்த்துப் போராடும் துணிவைச் சமூக மக்கள் இழந்துவிட்ட நேரத்தில், ஒரு சமயவாதியாகிய அப்பர் பெருமான் சமூகக் கொடுமைகளுக்கெதிராகப் போர்க் கொடி

உயர்த்திய புரட்சிகரமான வீர வரலாறு கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் அமைகின்றது.

இப்போராட்டம் கூட ஒரு வன்முறைப் போராட்டமாக அமையாது இறைவன் பெயரால் ஒரு சாத்வீகப் போராட்டமாகவே உருவெடுக்கின்றது. திருவதிகை வந்தடைந்த அரசச் சுற்றத்தார் அப்பரடிகளை நோக்கி,

" இன்று நுமை அரசன் அழைத்தது
எமை விடுத்தான், போதும் "

எனக் கூறுகின்றனர்.

மன்னவன் அழைப்பினை ஏற்க வேண்டிய கடமை ஒரு குடிமகன் என்ற முறையில் தமக்கு உண்டு என்பதை உணராதவரல்லர் அப்பரடிகள். ஆனால் மன்னன் நடுவுநிலைமை தவறிவிட்ட நேரத்தில் அவனுக்கு மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமை இல்லை என்று அவர் கருதுகின்றார்.

" நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் "

என்ற திருத்தாண்டகத்தால் மன்னன் கட்டளைக்கு அடிபணிய மறுக்கின்றார் அப்பரடிகள்.

தமிழகவரலாற்றில் முடியாட்சிக்கெதிராக ஒரு குடிமகன் எழுப்பிய - அதிலும் ஒரு சமயத்தலைவர் எழுப்பிய வீரமிக்கஉரிமைக் குரலாக முதல் முழக்கமாக இது அமைகின்றது. சமயவாதிகள் கோழைகளல்லர். அநீதி இழைக்கப்படுமானால் அரசனையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. மரணம் அதற்கான பரிசாக அவர்களுக்கு ஏற்படுமானாலும் அதனைஏற்க அவர்கள் தயங்கமாட்டார்கள். அரசன் வெறும் ஆட்சித் தலைவன்மட்டுமே. குடிமக்கள் ஒரு காலும் மன்னனுக்கு அடிமைகளல்லர். சங்கரனாகிய கோமானுக்கு மட்டுமே என்றென்றும் அடிமைகள் என்ற பொருள் தரும் திருத்தாண்டகம் அப்பரடிகளின் சமயநெறிப்பட்ட சமூகச் சிந்தனைகளுள் முதலாவதாக எண்ணத்தக்கது. " ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே " என்று தொடங்கும் அமரகவி பாரதி,

" பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம்
பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம் "

என்று நிறைவித்த அருமைப்பாட்டில் அப்பரடிகளின் உரிமை முழக்கம் புதுவடிவம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

(தொடரும்)

Dharmapuram Adhinam

SriGurugnanasambandar Mission Matriculation School,

Mayiladuthurai Branch - Mayiladuthurai.

Good Progress

Gurugnanasambandar Mission Matriculation School was established on 18—10—80 with a strength of three hundred students. Now the strength has incresed nearly to one thousand and five hundred. This year, we have started Higher Secondary classes with two groups-Group A: Maths, Physics, Chemistry, and Biology and Group B: Maths, Physics, Chemistry and Computer Science.

We have sent 11 pupils to write the Matriculation public examination in March 1988. Out of 11 students, 10 students come out with first class and one student 2nd class; so we secured cent percent result. We secured the third rank in the state level.

The first rank goes to Authorshaw Vidyala Matriculation Higher Secondary School, Madras with 1004/1100. The Second rank goes to Donbosco Matriculation Higher Secondary School, Madras with 995/1100. We are proud to say that our student M. Rajeswari got 990/1100 marks and she was given a merit certificate and a cash prize of Rs. 505/- by the Association of Matriculation School, Madras, when they conducted a meeting on 10—9—88.

PRINCIPAL
Guru Gnana Sambandar Mission
Matriculation Higher Secondary School,
33 A, Gandhiji Road.
Mayiladuthurai.

10—9—88.

மேல் ஆதனூர்
ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ மகாதேவசுவாமி திருக்கோயிலில்
புது மின் விளக்கு ஏற்றிவைத்து,
கிராமவாசிகளுக்குத் திருநெறி அருளும் பொருட்டு,

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
எழுந்தருளிய காட்சி

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
அருளாசி வழங்குதல்
24—8—1988

தருமை ஆதீனம் ஆவணிமூலவிழா

தருமை ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

ஆதீனக் கல்வி நிலையங்களின் மாணவ மாணவியருக்குப்

பரிசுகள் வழங்கி ஆசி அருளல்

23—8—1988

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph.D , D. P. P. A., D, U. N., I. U
பருத்தியூர்.

குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை; கோல வியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது
[அன்னமாம்;
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

அ. கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழை.

(1) திருக்கயிலாயத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்ட சிவபெருமானுக்கு இமவான் என்ற மலையரசன் 'கன்னிகாதான மாக' அளித்த, கனமான பொற்குழை அணிந்த பார்வதியை நினைவு படுத்துகிறார்.

(2) மலைகளுக்குள் சிறந்த கயிலாயத்தைத் தனது இருப்பிட மாகக் கொண்ட சிவபெருமானை, கயிலாயன், கைலாசபதி, கைலாச வாசி என்றெல்லாம் அழைப்பது அடியார் இயல்பு. "கயிலாயன் காண்" என்பது தேவாரம். அக்கயிலாயனைப் பட்டர் இங்குத் திருமண மாப்பிள்ளைக்குரிய மரியாதையுடன் 'கயிலாயர்' என்று குறிப்பிடும் நயம் எண்ணி மகிழ்தற் குரியது.

(3) தவமியற்றிய தாட்சாயணியை இறைவன் தன்னுடன் 'எடுத்துச் சென்று திருமணம் செய்துகொண்டான். அதுபோலன்றி இமவான் மகளை அவன் (இமவான்)'கொடுக்க' ஏற்றுக்கொண்டான். எனவே "இமவான் அளித்த கனங்குழை" என்றார்.

(4) மற்றும் மலையரசன் "என்மகளைத் தந்தேன், ஏற்றருள்க" எனக் கூறிக், 'கன்னிகாதானம்' என்ற முறையில் கொடுக்க, இறைவன் 'பாணிக்கிரஹணம்' என்ற முறையில் கரம்பற்றி ஏற்றுக் கொண்டதால் "இமவான் அளித்த கனங்குழை" என்றார்.

(5) "கன்யாம் கனகஸம்பன்னாம் சர்வாபர்ண பூஷிதாம்
தாஸ்யாமி சம்பவே துப்யம் ஸர்வமங்கள சோபனம்
ப்ரதிக்ருண்ணீஷ்வ தேவேச மமஸாயுஜ்யதோ பவ!
ப்ரதிஜக் ராஹ சம்புஸ்தம் சர்வலோக ஹிதாயவை."

என்று பார்வதியை இமவான் கன்னிகாதானம் செய்துகொடுத்த செய்தி ஸ்காந்த மகா புராணத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதன்படி எல்லா அணிகலன்களும்பூண்ட - பொன்னணிகள்பூண்ட கன்னிகையை இமவான் கொடுத்தான் என்பது தெரிகிறது. அக் கருத்தை அபிராமி அந்தாதி சுருக்கமாகக் 'கனங்குழை' என்ற சொல்லால் உரைக்கிறது.

கயிலாயருக்கு அன்னையை இமவான் அளித்த - 'பார்வதி திருமணம்' பற்றிய விரிவான கட்டுரை இவ்வந்தாதித் தொடரின் நிறைவுக் கட்டுரையாக இடம்பெறும். மேலும் பல செய்திகளை அங்கு நினைவுகொள்வோம்.

ஆ. குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை.

(1) கயிலாயருக்கு இமவான் அளித்த கனங்குழை கடம்ப வனத்தில் இசைபாடும் குயிலாக எழுந்தருளுகிறாள்.

(2) அம்பிகை ஸ்ரீ நகரத்தில் இருக்கும் கடம்பவனத்தில் குயில்போல் உலவிடுவாள். அவ்வாறே இப்பூவுலகில் கடம்பவனம் எனப்படும் மதுரையம் பதியில் குயிலாய் இருப்பாள்.

(3) மாதங்கி, சியாமளை போன்ற பெயர்களுடன் அம்பிகை கடம்பவனத்தில் பண்களிக்கும் வீணையுடன் வீற்றிருந்து இனிய இசையெழுப்புவாள். இனிய இசை எழுப்பும் காரணத்தாலும், கடம்பவன மென்னும் துவாதசாந்தத்தில் நாத ரூபமாய் விளங்கும் காரணத்தாலும் அவளைக் 'குயில்' என்று குறிப்பிட்டார். முன்னரே "கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியிடை" என்ற பாடலில் கடம்பாடவி பற்றியும் மாதங்கி பற்றியும் விரிவாகக் கண்டோம்.

இ. கோல இயல் மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை.

(1) இமயமலைச் சாரலில் அழகும் பெருமையும் உடைய மயிலெனத் திகழ்ந்தாள்.

(2) மயிலின் சாயல் பெற்றுப் பார்வதி என்ற பெயருடன் இமயமலைச் சாரலில் உலாவியதால் 'கோல இயல் மயில்' என்றார். பிரணவாகாரமான அம்பிகையே தன் எளிவந்த தன்மையால் மலையரசன் பெண்ணாக உலவினாள் என்பது தோன்ற அப்பிரணவ ரூபமான மயில் என்று புகழ்ந்தார்.

(3) அடவியில் இசைக்கும் குயிலென இருப்பவள் மலைச்சரிவில் நடமிடும் மயிலாய் இருக்கிறாள். விராலிமலை போன்ற மலைச்சாரல் களில் மயில்கள் உலாவுவதை இன்றும் காண்கிறோம். அவ்வாறே பார்வதி என்ற மயில் இமயமலைச்சாரலில் உலவியது.

ஈ. வந்து உதித்த வெயிலாய் இருக்கும் விசும்பில்

(1) வானவெளியில் வந்து தோன்றிய சூரியனாகவும் இருக்கிறாள். இங்கு வெய்யில் என்பது அதனைத்தரும் சூரியனை உணர்த்தியது.

(2) அடியாரின் இதயவெளியில் இருக்கும் இருளைப் போக்குவதில் சூரியர்களின் வரிசையினைப் போன்றவள் என்று சகஸ்ரநாமம் புகழுகிறது. சிதாகாசமென்னும் ஆகாயத்தில் ஒளியாய் விளங்கும் அம்பிகையை 'விசும்பில் வந்து உதித்த வெயில்' என்றார். அக விருளைப் போக்க அவளே வலிய வந்து உதித்தவெயில் என்றார்.

உ. கமலத்தின் மீது அன்னமாம்

(1) அவளே தாமரை மலரின் கண் அன்னமாக இருப்பாள்.

(2) அடியவரின் இதயத்தாமரையிலும் ஆதாரக் கமலங்களிலும் எழுந்தருளும் அன்னப் பறவை போன்றவள் அம்பிகை. மூலாதாரமாகிய தாமரையில் 'ஹம்சம்' என்ற மந்திர வடிவில் இருப்பவள அம்பிகை. அதுவே அஜபா மந்திரமெனவும் கூறப்படும். இவ்வாறு விளக்குகிறார் உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள்.

(3) 'சர்வ வர்ண உபசோபிதா' என்ற சகஸ்ரநாமப்படி அனைத்து வண்ணங்களுடனும் அம்பிகை விளங்குகிறாள். கரிய குயில், பசுமையான மயில், பொன்னிறமான வெயில், வெண்மையான அன்னம் என்றெல்லாம் விளங்குகிறாள். அவ்வாறே குயிலாய் மதுரையிலும், மயிலாய் இமயத்திலும், வெயிலாய்த் தில்லையிலும், அன்னமாய் ஆரூரிலும் எழுந்தருளுகிறாள் என்றும் கூறுவர்.

(4) காடு, மலை, நீர்நிலை, விசும்பு என எங்கும் நிறைந்தவள் என்பதும் எங்கு வேண்டினும், எப்படி வேண்டினும் தோன்றும் இயல்புடையவள் என்பதும இப்பாடலின் உட்கருத்து. அத்தகைய எளிவந்த தன்மையால் அவள் கயிலாயருக்கு இமவான் அளித்த கனங்குழையாய்த் தோன்றினாள்.

(5) தெய்வீக நூல்களை, திருமணம் அல்லது பட்டாபிஷேகத்துடன் நிறைவு செய்வது மரபு. அவ்வகையில் அபிராமி அந்தாதியின் 99 ஆவது பாடல் பார்வதி கல்யாணத்தை உரைக்கிறது. தம்பதிகளை அன்பால் பிணைக்கும் அம்பிகையின் ஆற்றலை நூறுவது பாடல் உரைக்கிறது. சிறிய தோத்திர நூலாகிய அந்தாதியில் இவ்வினிய நிறைவு சிறப்பாக அமைந்திருக்கிறது.

திருமணம் நிறைவேறுதலே இப்பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

தருமை ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

பார்வையாளர் குறிப்பு நகல்

இந்த ஸ்தலத்தில் சரபஹோமம் செய்ய உதவி செய்த எல்லா கோவில் அலுவலர்களுக்கும் எங்களது உளம் கனிந்த நன்றி. கோவில் மிகநல்ல முறையில் பராமரிக்கப்பட்டு ஹோம முறைகள் சீரிய முறையில் செய்யப்பட்டுள்ளது. திரு. ராஜு முதலியாரின் சிறந்த உபசாரம் போற்றத்தக்க முறையில் இருக்கிறது. சரபேஸ்வரரும், கம்பகரேஸ்வரரும் தர்மசம்வர்த்தனி அம்மாளும் தரிசிப்பதற்கு திவ்யமாகவும் மன அமைதியும் அளித்தன.

(ஒ-ம்) **கோ. கலியசுந்தரம்**
16—8—88 தலைமைப் பொறியாளர், பூண்டி, தமிழக அரசு.

★

இந்த சரபேஸ்வரர் ஆலயம் மிகவும் தூய்மையாகவும் தெய்வீகத்தன்மையைப்பறைசாற்றுவதாகவும் திறம்படநிர்வகித்து வருகிறார்கள். வருகின்ற பக்தர்களை நல்ல முறையில் பரிபாலித்து வருவது இறைவன் அருளே. எல்லாம் வல்ல இறைவன் எல்லா ஜீவன்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து இந்த உலகத்திலே ஓர் சாந்தி நிலவிட - அருள்புரிய வேண்டுகின்றேன்.

(ஒ-ம்) **மா. ஜெயபால்**
தனி அலுவலர், மத்திய கூட்டுறவு வங்கி,
16—8—88 கும்பகோணம்.

கட்டுரை எண். 9.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சித்தியார் ஆசிரியர், பூதங்களும் அவற்றின் காரியமான உடல் முதலான பகுதிகளும் தோன்றி அழிதல் காணப்படுதலின் அவை போன்றதான – பூதங்களின் காரியமான இவ்வுலகமும் தோன்றி அழியும் தன்மைத்தே ஆகும் என்பதனை " உதிப்பதும் ஈறும்......" என்று தொடங்கும் பாடலால் உணர்த்தினார்.

இதனைத் தொடர்ந்து இத்தோற்ற நாசங்களைச் செய்வதற்கு ஒரு கருத்தா வேண்டும் என்னும் கருத்தினை, ஆசிரியர், பல்வேறு தடைவிடைகளில் வைத்து விளக்குகின்றார்.

தடை :

தோற்ற நாசங்கள் உலகிற்கு உண்டு எனக் கொள்ளினும் அவை இவ்வுலகிற்கு இயல்பாயேயுள்ளன.

விடை :

தோற்ற நாசங்கள் விகார்ங்கள் ஆதவின் அவற்றை இயல்பு என்றல் பொருந்தாது. மேலும் பூதங்கள் இத்தோற்ற நாசங்களைச் செய்யும் எனில், அவை செயப்படு பொருளாயும் சடப்பொருளாயும் இருத்தலால் அவை அதற்குத் தகுதியுடையன வல்ல. எனவே, இவற்றை இயற்றுதற்கு இறைவன் ஒருவன் வேண்டும். இக் கருத்துக்களை,

" இயல்புகாண் தோற்றி மாய்கை என்றிடின் இயல்பி னுக்குச்
செயலதின்று இயல்புசெய் தி செய் தியேல் இயல்பதின்றும்
இயல்பதாம் பூதந்தானே இயற்றிடுஞ் செய்தியென்னில்
செயல்செய்வா னொருவன்வேண்டும் செயற்படும்
[அசேதனத்தால் "

என்னும் பாடல் விளக்குகின்றது.

தடை :

பூதங்கள் நான்கும் (மண், நீர், நெருப்பு, காற்று) வினைமுதற் பொருளாம். எனவே அவை இவ்வுலகத்தைத் தோற்றுவித்து நிலைநிறுத்தி அழிக்கும். ஆதலால் இத்தோற்ற நாசங்களைச் செய்தற்கு இப்பூதங்களே போதும்; வேறு ஒரு கருத்தா வேண்டுவ தில்லை.

விடை :

இந்நான்கு பூதங்களும் ஒவ்வொன்றும் தோன்றி நின்று அழியும் தன்மையன. எனவே அவை வினைமுதற் பொருளாகா. ஆதலால், இவற்றின் வேருக நிற்கும் ஒருவன் இருத்தல் வேண்டும்.

"நிலம்புனல் அனல்கால் காண நிறுத்திடு மழிக்குமாக்கும்
பயன் தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டாவென்னின்
இலங்கிய தோற்ற நிற்றல் ஈறுஇவை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலா நாதன் வேண்டும்"

என்னும் பாடல் மேற்காணும் கருத்துக்களை விளக்குகின்றது.

தோன்றி ஒடுங்கத் தோற்றுவான் வேண்டும் :

அடுத்துச் சௌத்திராந்திகர் மதம் பற்றி வினாவெழுப்பி, உலகம் சற்காரிய முறைப்படி (இல்பொருள் தோன்றாது; உள்பொருள் தோன்றும்) தோன்றி ஒடுங்கும் என்பதும் அதனை அங்ஙனம் செய்பவன் ஒருவன் வேண்டும் என்பதும் உறுதிப் படுத்தப் படுகின்றது.

பொருள்களெல்லாம், வித்தின் அழிவில் முளைதோன்றுவது போல அவ்வச்சார்பிலே தோன்றுமென்றும் இவற்றைத் தோற்று விக்க கருத்தா ஒருவன் வேண்டுவதில்லை என்றும் கூறினர். அதற்குரிய மறுப்பினைக் கீழ்வருமாறு கூறுகின்றார் ஆசிரியர். சார்பில் தோற்றம் இல்பொருளுக்கா அல்லது உள்பொருளுக்கா என எடுத்து ஆராயுமிடத்து, தோன்றி நிற்கும் பொருளுக்காயின் (குடம்போல) அது மீண்டும் தோன்ற வேண்டுவதில்லை. இல் பொருளுக்காயின் (முயற்கோடுபோல) அதுவும் ஒருக்காலும் தோன்றுவதில்லை. ஆதலால் இவ்விரண்டும் இன்றி உள்ளபொருளா யும் புதிதாகத் தோன்றுத பொருளாயும சூக்கும ரூபமாய் நிற்பது ஒரு பொருள் - அதுவே தோன்றும் என்றார். இக்கருத்துக்களை,

"சார்பினிற் றேன்று மெல்லாந் தருபவனில்லை யென்னின்
தேரினில் லதற்கோ தோற்ற முள்ளதற் கோநீ செப்பாய்
ஒரினில் லதுவுந் தோன்று துள்ளதே லுதிக்க வேண்டா
சோர்விலா தரண்டு மின்றிநிற்பது தோன்றுமன்றே"

என்னும் பாடல் விளக்குகின்றது.

காரியம் காரணத்தினின்று கருத்தாவால் தோன்றும் :

உள்பொருளாதலும் இல்பொருளாதலுமின்றி வெளிப்படாது சூக்குமரூபமாய் நிற்கும் காரியப்பொருள், ஒரு காரணத்தினுல் ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத்தோன்றும். அது எதுபோலவெனில் குயவனுல் மண்ணிலிருந்து படம் தோன்ருது குடம் தோன்றுவது போலாம்.

"உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டாம்
இல்லதே லில்லை யாகுந் தோற்றமு மிசையா தாகும்
உள்ளகா ரணத்தி லுண்டாங் காரியம் உதிக்கு மண்ணில்
இல்லதாம் படங்க டாதி யெழில்தரு மியற்று வானுல்"

என்னும் பாடல் மேற்காணும் கருத்திற்குச் சான்றாகும்.

ஒரு காரியப்பொருள், ஒரு கருத்தாவின்றி, தனது காரணத்தினின்று தானே தோன்றித் தானே அழியும் என்று கருதலாமோ எனில், அங்ஙனம் கருதுவது பொருந்துமாறில்லை. ஏனெனில் தானே தோன்றும் ஒரு பொருள் இருப்பின், அதற்கு அழிவு என்பது தேவையில்லை; அல்லது அது அழியுமாயின், மீளத்தோன்றுதலும் கூடாதாம். எனவே தானே தோன்றுதலும் தானே அழிதலும் எங்ஙனமும் பொருந்தாது.

இனி, காரியப்பொருளேயழியும் காரணம் அழியாது என்று கூறலாமோயெனின், அதுவும் பொருந்தாது. காரணம் உள்பொருள்; எனவே அதனிடத்துச் சக்தி ரூபமாய் அடங்கியிருக்கும் காரியமும் உள்பொருளாகும் அது பின்பு தூலரூபமாய் வெளிப்பட்டுத் தோன்றுதலும் ஒரு கருத்தாவினுல் ஆகும். இக்கருத்துக்களை,

"ஒருபொரு ளொருவ னின்றி யுளதில தாகு மென்னின்
தருபொரு ளுண்டே லின்ருந் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிலது காரிய முதலுள தாகு மென்னிற்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்த வாலாம்"

என்னும் பாடல் உணர்த்துகின்றது.

காயத்தைப்போல உலகமும் தோன்றியழியும் :

மீமாஞ்சகர், தேகம் முதலானவை தோன்றி அழியும்; ஆனல் உலகம் தோன்றியழியாது – நித்தமாயிருக்கும் என்பர். உலகிற்கு முதற்காரணம் பூதங்கள். பூதங்கள் ஒவ்வொன்றும் தோன்றி அழியும்போது பூதங்களால் ஆன இவ்வுலகமும் தோன்றி அழியும் என்று அவரின் கொள்கையினை மறுத்தார்.

"காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம் உலகிற்காணேம்
நீயித்தை உரைத்தவாறு இங்கு என்எனில் நிகழ்த்தும் உண்மை
மாயத்த உலகம் பூநீர் தீவளி வான மாதி
ஆயித்தான் ஒன்றின் ஒன்று தோன்றி நின்று அழிதலாலே"

என்னும் பாடல் மேற்காணும் கருத்தை விளக்குகிறது.

ஈண்டு, "ஒன்றின் ஒன்று தோன்றி" என்பதற்கு ஒன்றினின்றும் ஒன்று தோன்றி எனவும் பொருள் கூறுவர். ஆன்மாவினின்று ஆகாயமும், ஆகாயத்தினின்று காற்றும், காற்றினின்று ஒளியும், ஒளியினின்று நீரும், நீரினின்று மண்ணும் தோன்றும் என்று கூறும் உபநிடதச் சுருதி மீமாஞ்சகருக்குப் பிரமாணம் ஆதலால் அதனைக் கொண்டே அவரின் கருத்து இவ்வகையில் மறுக்கப்பட்டது என்பர்.

இருவகைக் கருத்தினுலும் ஓர் உண்மை புலப்படுகிறது. மீமாஞ்சகர் கூறும் கருத்து, மறுக்கப்பட வேண்டியதே என்பது அது. எனவே உலகம் தேகம் போலவே தோன்றி அழியும் தன்மைத்தே ஆகும் என உணர்தல் அவசியம். (தொடரும்)

கடிதம்

டாக்டர் க. சுவர்ணகாளீச்சுரன், டி. லிட்., பேராசிரியர், திருவையாறு, 8—9—88.

நம் ஆதீன ஞானசம்பந்தம் வர, குருமகாசந்நிதானத்தின் அனைத்திந்திய தமிழ் இலக்கியக் கழகத்தின் இரண்டாவது கருத்தரங்கில் வழங்கி அருளிய ஆசி அமுதத்தில் திருக்கயிலையின் மூன்று பகுதிகளுக்கும் மூன்று திருத்தலங்களுக்கும் காட்டிய ஒற்றுமையும், திதிதான் தேதி என வழங்கலாயிற்று என்னும் கருத்துக்களும் என் உள்ளத்தை மகிழ்வித்தன. திதியின் பெயர்கள் எண்ணிக்கையைக் குறிப்பது அது வளர்பிறை தேய்பிறை நாட்களின் எண்ணிக்கை என்று அறிந்து வைத்திருந்தேன். அத் திதிதான் தேதியாயிற்று என்பதனைக் குருமகாசந்நிதானத்தால் அறிந்து மகிழ்ந்தேன்.

இவ்வாறே பெரியபுராண உபதேச அமிர்தத்தில் பரஞ்சோதியார் மூவரையும் அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டுகளையும் விளக்கியதோடு வரலாற்றுக் குறிப்புக்களையும் தந்தருளி இருக்கின்றீர்கள். மேலும் திருவெண்காட்டு நங்கை பெயர் விளக்கமும்-மனையறத்தின் வேர் என்ற திருவாக்கின நயங்களும் திரு அவதாரம் செய்தார், அவதாரம் செய்தார், அவதரித்தார் என்று கூறிய தற்துரிய நோக்கினையும் விளக்கியதையும் இவ்வுபதேசத்தைப் பெரியபுராண நாயன்மாரின் ஒருவர் பெயரைத் தாங்கியவரைத் கொண்டே வெளிப்படச் செய்த கருணையையும் சிந்தித்து வாழ்த்தி மகிழ்ந்தேன்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 9, பக்கம் 473 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (3)

(கி. மு. 384-322)

தர்க்க சாத்திரத்தின் தந்தை :

அரிஸ்டாட்டில் தர்க்க சாத்திரத்தின் - அளவை அறிவியலின் தந்தை (The Father of LOGIC) என்று அறிஞர்களால் பெரிதும் புகழப்படுபவராவார். அவர் அத்துறையிலே செய்துள்ள சாதனை சாதாரணமானது அல்ல, வியக்கத்தக்கது; வியந்து அதிசயிக்கத் தக்கது. பிற்காலத்தில் வளர்ந்த தர்க்க நூல் யாவும் அரிஸ்டாட்டிலினை அனுசரித்தே - அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் "மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் வரலாறு" (A History of Western Philosophers) என்ற புகழ்வாய்ந்த புத்தகத்தில் பேசுகிறார்: "மனிதனது சிந்தனைப் போக்குகளிலே, எல்லா வரலாற்றிலும் ஒரு தனிப்பட்ட சிந்தனையாளன் இப்படிப் புரிந்துள்ள சாதனையிலே இதற்கு இணையான தோர் ஆக்க நிகழ்ச்சியைக் காணவே முடியாது. ஒரு முழு அறிவியலினைத் தாமே கொணர்ந்து அறிமுகப்படுத்தி ஸ்தாபித் துள்ளார். (There is no parallel case in the whole history of man's achievement in the whole history of man's intellectnal pursuits in which a single thinker has brought to completion a new science) இவர் காலத்திற்கு முன் சீனோ (Zeno) போன்ற அறிஞர்களும், சோபிஸ்ட்டுகளும் (Sophists), சாக்ரட்டீஸும் (Socrates) பிளேட்டோவும் (Plato) போன்றவர்கள் தர்க்க சாத்திரத் தினைத் தங்கள் போதனைகளில் போற்றிப் பேசியுள்ள போதிலும், அரிஸ்டாட்டில் தான் அதற்கு அறிவியல அமைப்பினை (Scientific treatment) அளித்துள்ளார். எனவே தான் இவர் தர்க்க சாத்திரத்தின் தந்தை என்ற பெரும் பெயர் பெற்றுள்ளார் எனலாம். "அரிஸ்டாட்டிலின் தாக்கம் (influence) பல துறைகளிலே மேலானதாகக் காணப்பட்டாலும் தர்க்கத் துறையிலே தான்

மிகமிகப் பெருமைமிக்கதாக அது காணப்படுகிறது" என்று பிறிதொரு மேதை பேசிப் புகழ்கிருர். ("Aristotle's influence, which was very great in many fields, was greatest of all in Logic")

தர்க்க சாத்திரத்தின் இருகூறுகள் :

தர்க்க சாத்திரத்தில் இரு கூறுகள் உண்டு. இரண்டும் முரண்பட்டவை அல்ல என்ற போதிலும் அவை இரண்டும் தருக்க சாத்திரத்திலே தகுதி மிக்க இடத்தைப் பெறுகின்றன. பிரேரணைப் பிரமாணத்தருக்கம் (Inductive Logic) என்பது ஒன்று. பிரான்ஸிஸ் பேகன் (Francis Bacon) போன்றவர்கள் அரிஸ்டாட்டிலைச் சாடி பிரேரணைப் பிரமான தர்க்கம் சரியல்ல எனப் பெரிதும் வாதிப்பர். பிற்காலத்தில் வந்த பெரும்பான்மையான பேரறிஞர்கள் அரிஸ்டாட்டில் ஆக்கித் தந்த முறையே அதிசயிக்கத்தக்கது எனப் போற்றினர். அதற்குப் பெயர் அனுமானப் பிரமாணத் தர்க்கம் (Deductive Logic) எனப்படும். இவை இரண்டினைப் பற்றியும் பின்னர் எடுத்துக் கொண்டு சோதிக்கலாம்.

தர்க்கத்தின் பயன் :

தர்க்க சாத்திரம் எல்லாச் சாத்திரங்களுக்கும் அடிப்படையானது என்பார் அரிஸ்டாட்டில். இதனை "அறிவியல்கட்கெல்லாம் அடிப்படை அறிவியல்'' என்று அறிஞர் பெருமக்கள் ஆதரித்துப் பேசுவர். (Logic is the Science of Sciences) தர்க்கத்தின் பணி என்னவென்ருல் அறிவினை அடைதற்கு வாய்ப்பான வழியைத் இது தந்து உதவுகிறது. (The function of Logic is to describe the method of attaining knowledge) அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி ஆழ்ந்த அறிவினைப் பெற தர்க்க சாத்திரம் ஓர் அதிமுக்கிய ஆயுதமாகத் திகழ்கிறது; அத்தோடு தத்துவசாத்திரம்—எல்லாவற்றிற்கும் அடித்தலமாக இருக்கும் அந்த அறிவியல் - நாம் பயிலவேண்டுமானல் முதலில் தர்க்கத்தைப் பயிலவேண்டும். ஏன்? எத்துறை அறிவியலையும் ஆக்க பூர்வமாக, விஞ்ஞான ரீதியாக, முறையாகப் (methodically) பயில, தர்க்க சாத்திரச் சிந்தனை நெறிமுறைகளில் சரளமான சஞ்சாரம் இருக்க வேண்டும் என அரிஸ்டாட்டில் வற்புறுத்துவார். சாக்ரட்டீஸின் முறையின் சிறப்பிற்கு இதுவே முத்தாய்ப்பு வைத்தது போலத் திகழ்ந்தது, எல்லாவித விசேட ஆய்வுகளுக்குமே தர்க்க அனுபவ முன் தேவையாகும் என்பது அரிஸ்டாட்டிலின் அரிய சித்தாந்தம். (Logic is the antecedent of all special inquiries) தர்க்க சாத்திரம், பௌதிகம், உயிரியல், அரசியல் போன்ற அறிவியல் துறைகட்கு இணையாக நிற்கிறது என்பது மட்டுமல்ல; இஃது அடுத்துள்ள அத்தனை அறிவியல்துறைகட்கும் அவசியமான ஆயத்தம் செய்யும் கருவியாகவும் அமைந்துள்ளது (It is the indispensable preparation of all sciences)

முக்கூற்று நியாயம் :

அரிஸ்டாட்டிலின் தர்க்கநூல் அநேக விஷயங்களை அலசி ஆய்கிறது. அவற்றில் தலைசிறந்ததாகத் திகழ்வது முக்கூற்று நியாயம் (SYLLOGISM). ஒன்றை மட்டுமே மாதிரிக்கு எடுத்துக் கொண்டு மதிப்பீடு செய்யலாம். விஞ்ஞான உண்மைகள் என்பன எப்போதும் வித்தியாசமின்றி ஒரே மாதிரியாக இருக்கக் கூடியவை. அவை ஏதோ வேறுவிதமாக இருக்கக் முடியாதவை ஆகும். (Something which cannot be otherwise.) இரண்டும் மூன்றும் ஐந்து என்றால் அஃது எப்போதும், எப்படியும், எங்கும், எவ்விடத்தும் எந்நாட்டிலும் ஒரே மாதிரியாகும். நெருப்பு சூடானது; இரவு இருட்டைக்கொண்டது. சர்க்கரை இனிப்புடையது; எல்லா மானிடரும் ஒரு நாள் இறப்பர்: பலாப்பழம் இனிப்புடையது; பூமிக்கு ஈர்ப்புசக்தி உண்டு. இவை எல்லாம் விஞ்ஞான உண்மைகள் எனக்கொள்ளலாம். வேறு குறுக்கீடு இல்லை என்றால் வெற்றி கொள்ளும் நியதிகளாகவே இவை எப்போதும் நிற்கவல்லன.

சிந்தனை என்பது வாதிப்பதிலோ அல்லது. விஞ்ஞானச்சான்று கொண்டு விளக்கம் காண்பதிலோ காரணங்களால் விதிக்கப்பட்ட உலகளாவிய உண்மையிலிருந்து தனி எடுத்துக்காட்டைக் காட்டித் தீர்மானம் செய்வதிலோ அடங்கியுள்ளது. (Thinking consists in reasoning, or scientific demonstration, in deriving the particular from the universal, conditioned from its causes.) ஊகங்கள் (Inferences) என்பவை காரணரூபத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்புகள். அவற்றைக் கூற்றுக்கள் அல்லது வாசகங்கள் (Propositions) என அரிஸ்டாட்டில் அறிவிக்கிறார். தீர்மானங்கள் (Judgments) என்பவை கருத்துக்களால் ஆக்கப்படுவன. அந்தக் கருத்துக்கள் (Concepts) பதங்க (terms) ளால் தெரிவிக்கப் படுவன. இந்த அடிப்படையில் இனி முக்கூற்று நியாயத்தினை (SYLLOGISM) ஆய்வோம்.

முக்கூற்று நியாயத்திலே (SYLLOGISM) எப்போதும் மூன்று கூறுகள் இருக்கும். ஒரு மூல உண்மையை (Original truth) எடுத்துக் கொண்டு வாதினை அமைக்கிறார் அரிஸ்டாட்டில் – அஃது ஒரு உலகளாவிய உண்மையாக (universal truth) அமைந்திருக்கும். முக்கூற்று நியாயம் என்பது ஓர் அனுமான மெய்ம்மையினை (Presupposition) எடுத்துக்கொண்டு, மேற்கோள் ஒன்றைக்காட்டி, பிரதானக் கூற்றுடன் ஒப்பிட்டுச் சிறிய மாதிரிக் கூற்றை ஒன்றினைச் சுட்டிக்காட்டி (Major and minor premises) முடிவினை (Conclusion) தீர்மானிப்பதாகும். எடுத்துக்கொண்ட பிரதானக்கூற்று ஓர் உலகளாவிய உண்மையாயின்முடிவு உண்மையானதாக எய்தலாம். ஆனால் எடுத்துக்கொண்ட பிரதானக் கூற்று உலகளாவிய

உண்மையாக அமையவில்லை என்றால் முடிவு தவறானதாகப் போகும் ஆபத்து உண்டு. மரபாக அரிஸ்டாட்டில் காட்டும் உதாரணம் கீழே காணப்படுவது:-

All men are mortal (Major Premise)
Socrates is a man (Minor Premise)
Socrates is a mortal (Conclusion)

எல்லா மாந்தரும் இறக்கக் கூடியவர் (பிரதானக் கூற்று)
சாக்ரட்டீஸ் ஒரு மனிதர் (சிறிய மாதிரிக் கூற்று)
சாக்ரட்டீஸ் இறக்கக் கூடியவர் (முடிவு)

பிரதானக் கூற்று உலகளாவி இவ்வுதாரணத்தில் அமைந்தமையால் முடிவு உண்மையானதாகக் கிடைக்கிறது. பொது உண்மை சிலரைப் பற்றி எடுத்துக்கொண்டு மாதிரிக் கூற்று ஒன்றைக் கூறி ஆய்ந்தால் அஃது ஒவ்வாததாக முடியும். ஓர் உதாரணம் எடுத்துக் கொள்ளுவோம்.

சில மனிதர்கள் கல்லாதவர்களாக உள்ளனர். (பிரதானக் கூற்று)
சிவசாமி ஒரு மனிதர். (மாதிரிக் கூற்று)
சிவசாமி கல்லாதவர். (முடிவு)

இவ்வுதாரணத்தில் எல்லா மனிதர்களுக்கும் பொருந்தாத ஓர் உலகளாவிய உதாரணத்தை எடுத்துக் கொண்டு வாதிடப் பட்டுள்ளதால் முடிவு சரியாக அமையவில்லை. சில மனிதர்கள் கல்லாதவர்கள்; பலர் கற்றவர்களாக இருக்கிறார்கள். சிவசாமி ஒரு மனிதனாய் இருப்பதால் அவர் கல்லாதவராக இருக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை. எனவே பிரதானக் கூற்று (Mojor premise) உலகளாவிய உண்மையைக் (Universal truth) கொண்டதாக இருந்தால் தான் முடிவு (Conclusion) முற்றும் உண்மையான ஒன்றாகக் கிடைக்கும். இஃது இன்றியமையாத ஒரு கூறு.

ஒழுங்கற்ற முக்கூற்று நியாயம் :

வாதம் எப்போதும் வாதமாகவே நடைபெறுவதில்லை. விதண்டாவாதமாகப், பிடிவாதமாகவும் மாறுவதுண்டு. அத்தகைய வாதங்கள் ஒழுங்கற்ற வாதமாகப் போதலும் உண்டு. அரிஸ்டாட்டில் அதனை, ஒழுங்கற்ற முக்கூற்று வாதம் (Illicit Syllogism) எனக் குறிப்பிடுகிறார். ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

"நான் திருமணம் செய்து கொண்டால் மகிழ்ச்சி அடைவதில்லை" ஏனெனில் நான் ஒரு பெண்ணைக் காக்க வேண்டும்.

நான் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலும் மகிழ்ச்சி அடைவதில்லை. ஏனெனில் என்னைப் பார்த்துக் கொள்ள ஒருத்தி இல்லை.

நான் திருமணம் செய்து கொண்டாலும், இல்லை என்றாலும் மகிழ்ச்சி இல்லை"

இஃது அமைப்பான வாதமில்லை. விதண்டாவாதம் அல்லது திமிர்வாதம் என்று எப்படி வேண்டுமானாலும் கூறிக் கொள்ளலாம். இஃது ஓர் ஒழுங்கற்ற முக்கூற்று நியாயம் (Illicit Syllogism) இதனைத் தகர்த்து எறியலாம். திருமணம் செய்து கொண்டாலும், திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலும் மகிழ்ச்சி இல்லை என்ற விதண்டா வாதத்தை வெகுசுலபமாகத் எதிர்த்து எறியலாம். இதற்கு மறுப்புரைமுறை (Rebuttal) என்று பெயர். மேலே குறிப்பிட்ட விதண்டாவாதத்தை வெட்டி முறித்துக் கீழ்க் கண்டவாறு கிட்டித் தகர்க்கலாம்.

"நான் திருமணம் செய்து கொண்டால் மகிழ்ச்சி அடைகின்றேன். ஏன் என்றால் என்னைப் பார்த்துக் கொள்ள ஒரு பெண் வந்து விடுகின்றாள்.

நான் திருமணம் செய்து கொள்ள வில்லை என்றால் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் நான் யாரையும் காக்க வேண்டிய அவசியம் இல்லை.

நான் திருமணம் செய்து கொண்டாலும் செய்து கொள்ள வில்லை என்றாலும் மகிழ்ச்சி அடைகிறேன்."

முதல்வாதம் இங்கே "ரிபட்டல்" முறையினாலே எற்றி வீழ்த்தப்படுகிறது.

எனவே முக்கூற்று நியாயத்தில் பிரதானக் கூற்று (Major Premise) உலகளாவிய உண்மையாக அமையவேண்டும். மாதிரிக் கூற்று (Minor Premise) ஒன்றைக்காட்டி முடிவினை (Conclusion) எடுப்பது எளிதாக அமையும்.

அரிஸ்டாட்டிலின் தர்க்க சாஸ்திரத்தின் பிற தன்மைகள் பற்றி அடுத்து வரும் இதழில் ஆய்வோம்.

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Blographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

அவனிகந்தர்வ ஈசுவரகிரகம்

டாக்டர் திரு. இரா. கலைக்கோவன்,
பி. லிட்., எம். பி. பி. எஸ்., டி. ஓ.,

கட்டுரை எழுதத் துணை புரிந்தவர் :
செல்வி மு. நளினி, எம். ஏ., (வரலாறு)

(மலர் 47, இதழ் 9, பக்கம் 483 இன் தொடர்ச்சி.)

இம்மண்டபத்துத் தூண்களைக் கருணையாளர்கள் சிலர் கொடையாகத் தந்துள்ளனர். கலியுக நிம்மகோன், கங்கமார்த்தாண்டன், மறவன் மானதனன், அரையகன் 'அரையுளி, ஸ்ரீ குறிஞ்சிபாடி உடையான் மஞ்சன் முடிகொண்டான் ராஜ ராஜ வஞ்சி இளங்கோ என்னும் பெருமக்களின் தாராள நெஞ்சு, இந்தப் பேரழகு மண்டபத்தை நமக்கு உருவாக்கித் தந்துள்ளது. இத்தகு பேராளர்களின் பெயர்களைப் பேராசிரியப் பெருமக்கள் சிலர் பிழையாகக் குறித்திருப்பதும், இறுதிக் கொடையாளியின் பெயரை அனைவருமே விட்டுவிட்டிருப்பதும் நமக்கு வேதனையைத் தருகிறது. டாக்டர் பாலாம்பாள் கலியுக நிம்மகோனைக் கலியுக நிர்மலன் என்று ஓரிடத்திலும், கலியுக நிர்முலன் என்று மற்றோர் இடத்திலும் குறிப்பிடக், கலியுக நிர் லன் என்று கல்வெட்டறிக்கை சுட்டுகிறது. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கலியுக நிர்மூலன் என்கிறார். மறவன் மானதனன் டாக்டர் பாலம்பாளின் கருணையால் மறவன் மனதனனுக்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவருமே குறிஞ்சிப்பாடி வஞ்சி இளங்கோவைக் கைவிட்டுவிட்டனர். கல்வெட்டறிக்கையில் இப்பெயர் இருந்தும் கூட,、 எப்படி இவர்கள் இளங்கோவை மறந்தனர் என்பது வியப்பாகவே உள்ளது.

இம் ’கசமண்டபத்திற்கு வடபுறத்தில் ஒரு சாளரத்திறப்பும், தென்புறத்தில் நுழைவாயிலும், மேற்கில் சிறு திறப்பும் உள்ளன. கிழக்குப்புறத்தில் மேற்குப்பார்த்த நிலையில் வலப்பக்கம் கதிரவன், கங்காதரர், நான்முகன் திருமேனிகளும், இடப்பக்கம் பைரவர் திருமேனியும் காணக் கிடக்கின்றன.

இந்நான்கு சிற்பங்களுள் கதிரவனும், கங்காதரரும் கலைப் பேழைகள். இடுப்புக்கு மேல் உயர்த்தப்பட்ட இருகைகளிலும் தாமரை மலர்களைக் கொண்டவராய்க் காட்சியளிக்கும் கதிரவன்

பத்தாம் நூற்றுண்டினர். தாமரையின் தண்டுகள் சிதைந்துள்ளன. கதிரவனின் தலையைக் கரண்ட மகுடம் அழகு செய்கிறது.

பழுவூரிலுள்ள சிற்பங்களிலேயே மிகவும் அழகு வாய்ந்தது இந்தக் கங்காதரர்தான். எத்தனையோ கங்காதரர்களைத் தமிழகத்துக் கோயில்கள் கொண்டிருந்தாலும் பழுவூர்க் கங்காதரர்க்கு அவை இணையாகா என்றே சொல்லலாம். சிற்பக் களஞ்சியமான கங்கை கொண்ட சோழபுரத்துக் கங்காதரர் கூட, பழுவூராருக்குச் சற்றுக் குறைவுதான். கங்கையைக் கொள்கிருனே கொழுநன் என்ற கோபக் கொந்தளிப்பில் ஒதுங்கும் கோமளக் கொழுந்தைக் கொஞ்சமாய் இழுத்துக், கொஞ்சலாய் அணைத்துச் சஞ்சலம் போக்கும் சாகசக்காரரல்லவா கங்காதரர். அந்த உல்லாசமும், சல்லாபமும் அதே சமயம் மனைவியின் சினம் தீர்க்கும் கவனம் நிறைந்த ஈடுபாடும் பழுவூர்ச் சிற்பத்தில் பாங்காய் வெளிப்பட்டுள்ளன.

நெடிய சடாமகுடம்; அதன் முகப்பில் தலையோடு; வலச்செவி நீள்செவி; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். கம்பீரமும் வனப்பும்கலந்த எழிலார்தோற்றத்திற்கு மேலும் சிறப்புச்சேர்ப்பது போல் ஆடையணிகலன்கள். வலப்பின்கை தலைமுடியின் ஒருபுரியில் கங்கையை ஏற்கிறது. இடக்கைகள் இரண்டும் விலகிச்செல்ல விரும்புவது போல், வலக்காலை முன்னே நிறுத்தி, வலக்கையை இடுப்பின் இடபுறமாய்நகர்த்திச் சினக்குறிப்புகாட்டும் சிவகாமியை அணைத்தவாறு ஆறுதலாய் அருகிழுக்கின்றன. குறிப்பாக இட மேற்கை இறைவியின் கரண்ட மகுடத்தோடு கூடிய தலையை ஆறுதலாய் வருடுகிறது. ‘போது உங்கள் போலியான தழுவலும் பொய்யான அன்பும்’ என்பது போல் தன் தோளை அணைக்கவரும் இறைவனின் இடமுன்கையை இறைவி தள்ளும் மெய்ப்பாட்டில், தேவியின் இடக்கை முழங்கை அளவில் மடங்கி இடது தோளுக் காய்த் திரும்பியுள்ளது. விடுவாரா இறைவன்! ஒசிந்து நிற்கும் ஒல்காப் பேரெழிலாம் இறைவியின் வல மார்பகத்தைத் தன் வலமுன் கரத்தால் இலேசாய்த் தழுவுகிருர். அவ்வளவில் தேவியின் உணர்வுகள் மாறுகின்றன. இறைவியின் அழகு முகத்தில் இறைவனின் சாகசத்தைப் புரிந்துகொண்ட தன்மை ஒளிர்கிறது! சினத்தின் மறைவும், களிப்பின் தொடக்கமும் கலந்து பாயும் உணர்வலைகளால், இனம்புரியாத ஒரு இன்பநெட்டுயிர்ப்பும், அதன் விளைவாய் இதழ்கள் இலேசாக நெகிழ ஓர் இளஞ்சிரிப்பும், அப்பப்பா! இறைவியின் திருமுகமெனும் கடலோரம் தான் எத்தனைக் காந்த அலைகள்! பழுவூர்க்காரர்கள் கொடுத்து வைத்தவர்கள். வாழ்க்கையின் நுணுக்கங்களை வரைபடமாய்க் காட்டும் இந்த வனப்புநிறை

சிற்பக் காவியம் இன்று இருட்டின் ஆதிக்கத்தில், யாருக்கும் தெரியாமல், எவரும் பார்த்து மகிழ்ந்துவிடக் கூடாது என்ற கனத்த கவனத்துடன் வௌவால்களுக்கும் பெருச்சாளிகளுக்கும் மட்டும் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் வகையில் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் நிலைக்கு யாரை நோவது?

மகா மண்டபத்தை யடுத்துச் சிறியதொரு இடைநாழிகை, இதற்குச் செல்லும வாயிலும் இரண்டு சிங்கத்தூண்கள். இடை நாழிகையின் வடக்கிலும் தெற்கிலும் திறப்புக்கள் உள்ளன. வட புறத்திலுள்ள திறப்புக்குநேரே சண்டீசர் சிறுகோயிலொன்றின் மகிழ்விருப்பில் வலக்கையில் மழுதாங்கி வீற்றிருக்கிறார். இடை நாழிகையின் மேற்குப்புறச் சுவரின் இருபுறமும் பரகேசரிவர்மனை உத்தமசோழனின் கல்வெட்டுகள் சிதைந்து உருக்குலைந்த நிலையில் 'வரலாற்றை நீங்கள் காப்பாற்றும் அழகு இதுதானா?' என்று கண்சிமிட்டிக் கேலி பேசுகின்றன. இந்தச் சுவர்களின் மேலே பூதகண வரிசை!

உள் மண்டபத்து வாசலை இரண்டு வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். காவலுக்கு அவசியமே இல்லாத கருவறை என்றாலும், பழைய நினைப்பில் இவர்கள் கடமையாற்றிக் கொண் டுள்ளனர். வலப்புறம் இருப்பவரின் வலக்கை 'பார்த்தீர்களா எதிர்ப்புறம் இருப்பவரின் கதியை' என்பதுபோல் சுட்டு முத்திரை யில் நீள, இடப்புறம் இருப்பவரின் வலக்கை 'எல்லாம் காலத்தின் கோலம்' என்பது போல் வியப்பு முத்திரையில் விரிந்துள்ளது. சடா மகுடமும், கீர்த்தி முகமும் ஆந்தைக்குண்டலம் பனையோலைக் குண்டலமெனச் செவியணிகளும், நேர்த்தியான ஆடையமைப்பும் இருந்து என்ன பயன்? பல நூற்றாண்டுகளாய் மேலிருந்து ஒழுகும் மழைநீரும், இவர்கள் காவலை இலட்சியம்செய்யாமல் கோயிலுக்குள் உறைந்திருக்கும் வௌவால்களின் எச்சங்களும், இன்னும் பலவித மான கழிவுகளும் இந்த வாயிற்காப்போரை வெள்ளையும் கருப்பும் கலந்த வேடிக்கை விநோதங்களாய் மாற்றியுள்ளன. தங்கள் திருக் கோலங்களைப் பார்க்கப் பிடிக்காமல்தானோ என்னவோ இருவருமே தத்தம் முகங்களைப் பக்கவாட்டில் திருப்பிக்கொண்டு விட்டனர்.

நான்கு தூண்களுடன் கூடிய உள் மண்டபத்தின் பக்கவாட்டில் வெறுமையான திண்ணைகள் உள்ளன. கருவறையில் வட்டமான ஆவுடையாரின்மேல் லிங்கத் திருமேனியராய் இப்போது அகத்தீசு வரர் என்றழைக்கப்படும் தென்வாயில் ஸ்ரீ கோயில் மகாதேவர் 'என் வாயில் நிலைமாற வழியில்லையா?' என்ற ஏங்குவதுபோல் வாடியுள்ளார்.

கருவறையின் புறச்சுவர்களில் முப்புறமும் கோட்டங்கள் உள்ளன. வடபுறம் நான்முகனும், கிழக்கில் முருகனும், தென்புறம் சந்திரசேகரரும நின்ற கோலத்தில் இடம் பெற்றுள்ளனர். மூன்று திருமேனிகளுமே முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் கடிய வலம்பிதத்திலும் கொண்டுள்ளன. நான்முகன் சடாமகுடமும் பனையோலைக் குண்டலங்களுமாய்ப் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு அழகுச் சிரிப்புடன் காட்சிதர, முருகன் சக்தியும வஜ்ரமும் பின்கைகளில் கொண்டு பெருமிதப் பொலிவோடு நிற்கிறார். மார்பில் சன்னவீரம்; இடுப்பாடையின் முடிச்சுகள் நேர்த்தியாய்த் தொங்குகின்றன. சந்திரசேகரர் தென்புறக் கோட்டத்தில் வலப்பின்கையில் அங்குசமும் இடப்பின்கையில் மானும் கொண்டு, வலச்செவியை மகர குண்டலமும் இடச்செவியைப் பனையோலைக் குண்டலமும் அழகுசெய்ய எழிலரசராய்க் காட்சி தருகிறார். இவரின் முகப்பொலிவு சிறப்ப அற்புதமாகும்.

கருவறைப் புறச்சுவர் அரைத்தூணொன்றில் மகிடாசுரயுத்தம், சிற்றுருவச் சிற்பங்களாய்க் காட்டப்பட்டுள்ளது. இறைவி முத்தலை ஈட்டியுடன் பாயும் சிற்பமொன்று மேற்பகுதியை அலங்கரிக்க, கீழ்ப் பகுதியின் ஒருபுறம் இறைவி, வாளும் கேடயமுமாய்ச் சிம்மத்தின் மீதமர்ந்து சீற, எதிரில் மகிடாசுரன், இதைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாதவன் போல் அலட்டிக்கொள்ளாமல் நிற்கும அழகை மிக அற்புதமாகச் சிற்ப வடிவில் சிறைப்பிடித்திருக்கிறார்கள் பழுவூர்ச் சிற்பிகள். இக்கோயிலில் காணப்படும் சிற்றுருவச் சிற்பத் தொகுதி இது ஒன்றுதான் என்றாலும், இது ஒன்றே அக்காலச் சிற்ப நுணுக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் மிளிர்கிறது. பாயும் சிங்கத்தின் வேகமும்கோபமும், அதன் மீதிருக்கும்தேவியின் உணர்வுகளையும் விஞ்சிய நிலையில் காட்டப்பட்டிருக்கும் சிறப்பு சிந்தனையை மயக்கும் சுந்தரப் பேரழகாகும்.

கருவறைக் கோட்டங்களின்மேல் மகர தோரணங்கள் உள்ளன. முருகன் கோட்டத்திற்கு மேலுள்ள மகர தோரணத்தின் கீழ்ப்பகுதி வளைவில் யானையை அழித்த மூர்த்தியும், மேற்பகுதி வளைவில் சிவபெருமானின் ஆடல் தோற்றமொன்றும் காணப்படுகின்றன. 19 செ. மீ. உயரமும் 23 செ. மீ. அகலமும் கொண்ட இடைவெளியில் யானையை அழித்த மூர்த்தியின் ஓங்காரத்தோற்றம் ஓம் வடிவிலேயே உருவாக்கப்பட்டுள்ள அழகு பழுவூரில் மட்டுமே காணக்கூடிய அற்புதமாகும். கஜமுக அசுரனை அழித்துக் காட்டிய அழகுக்கோலம் மையப்பகுதியில் அமைய, வலப்புறம் பூதகணமொன்று அமர்ந்த நிலையில், இரு கைகளிலும் தாளத்துடன் மகிழ்வுப் பெருக்கோடு காணப்படுகிறது. இடப்புறத்தில், அஞ்சிய முருகனை அணைத்துத் தேற்றுபவராய், உமை, 'போகலாமா வேண்டாமா' என்று தயங்குபவர் போல, விரியும் விழிகளில் வியப்பு

தேக்கிக் கஜசம்காரரின் வீரப் பெருமிதத் தோற்ற எழிலில் தனை மறந்து நிற்கிறுர்.

இடக்கால் ஊர்த்வ ஜாதுவாய் இடுப்பளவு உயர்த்தப்பட, வலக்கால் உறுதியாய்த் தரையில் ஊன்ற, இடுப்புக்குக் கீழ் உடலை வலப்புறமாய்த் திருப்பி, மேலுடலை நேர்ப்பட நிறுத்தி, முகத்தில் இலேசாய்ச் சினமும், அதனடியாகப் பெருமிதமும் பொங்க, அதிசயிக்கத் தக்கதொரு கோலத்தில் அழகாய்த் தோன்றும். யானையை அழித்த மூர்த்தியின் சடாமகுடத்தில் தலை யோடு தனியே தெரிகிறது. எட்டுத் திருக்கைகளில் வலப்புறம் மூன்றும், இடப்புறம் மூன்றும் கிழிந்த யானைத் தோலைப்பற்றிப் போர்த்திய நிலையிலிருக்க, விடுபட்ட வலக்கையில் முத்தலை ஈட்டியும், இடக்கையில் சுட்டு முத்திரையும் கொண்டுள்ளார். யானையின் தலை, இறைவனின் உயர்த்தப்பட்ட இடமுழங்காலுக்குச் சற்றுத் தள்ளி வலப்புறமாய்க் கீழிருக்கும் பூதகணத்தின் தலைக்கு மேலாகக் காட்டப்பட்டுள்ளது.

கஜசம்காரருக்கு மேலே உள்ள வளைவில் சிவபெருமானின் கரண ஆடல் தோற்றமொன்று அழகுற வடிக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு செ. மீ. உயரமும் ஒன்பது செ. மீ. அகலமும்கொண்ட இடத்திற்குள் இறைவனின் நாட்டியம் நிறைவாய் நடக்கிறது. வல முன் கை காக்கும் குறிப்பில்! இட முன் கை அர்த்தரேசிதமாய் உயர்த்தப்பட்டுள்ளது. இடப் பின் கையில் பாம்பு. வலப் பின் கையில் இருப்பது உடுக்கை போல் தெரிகிறது. சடாமகுடத்துடன் முகத்தை இடப்பக்கமாய் நிமிர்த்தித் திருப்பி இலேசாய்ச் சிரித்த நிலை. இறைவனின் இடக்கால் முழங்காலளவில் இலேசாய் மடங்கப் பாதம் முழுவதுமாய்த் தரையில் ஊன்றியுள்ளது. வலக்காலும் முழங்கால் அளவில் மடங்கியுள்ளது. ஆனுல் வலப்பாதம், விரல்களின் நுனிகள் தரையைத் தொட்டநிலையில், பாதத்தின் உட்பகுதி இடக்காலை நோக்கியிருக்க உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பை ஆடற்கலை வல்லுநர்கள் சூசி என்று சொல்லுவார்கள்.

அர்த்த ரேசிதம், லலிதம், பாதபவித்தகம், வினிவிருத்தம், கண்ட சூசி, பரிவிருத்தம் என்ற ஆறு கரணங்கள் இத்தகு காலமைப்புடன் பரதரால் சொல்லப்படுகின்றன. இவற்றுள் இவ்வாடல் தோற்றத்திற்கு அருகாமையில் வருவது வினிவிருத்தம் தான். மற்ற ஐந்து கரணங்களிலும் சொல்லப்பட்டுள்ள கைக் குறிப்புகள் முற்றிலும் மாறுபட்டிருக்க, வினிவிருத்தக் கரணக் கை முத்திரைதான் இவ்வாடல் நாயகனின் இடமேற்கையில் காட்டப் பட்டுள்ளது. தில்லைக் கரணக் கோவையில் வினிவிருத்தக் கரணமாகக் காட்டப்படும் ஆடல் தோற்றம் இப்பழுவூர் நாயகனைப் பெரிதும் ஒத்துள்ளமை இக்கருத்துக்கு மேலும் வலிமைசேர்க்கிறது. வினிவிருத்தக் கரணக் கோலத்தில் இறைவனின் ஆடல் தோற்றம் அபூர்வமாகவே காணப்படுவதால் இப்பழுவூர்ப் படைப்பு பெரும் சிறப்புக்குரியதாகிறது.

(தொடரும்)

சிறுத்தொண்டர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—9—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அன்று தருமை ஆதீனக் கலைக்கல்லூரியில் பி. காம்., வகுப்புத் தொடக்கவிழா - முதல்ஞாயிற்று அருளுபதேச நாளுடன் இணைந்தது! கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்து நின்ற அருமை நாள்!

காலைமணி 10-00 ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பண்டாரக் கட்டிலிருந்து ஆகமக்கட்டிற்கு எழுந்தருளினார்கள். பி. காம்; வகுப்பைத் தொடக்கி வைத்து உரைநிகழ்த்த வருகைபுரிந்திருந்த பெங்களூர், செந்தமிழ்ச்செல்வர் டாக்டர் திரு. ம. வே. ஜெயராமன், எம். ஏ;. டி. லிட். அவர்களும் அவர்தம் துணைவியாரும் மற்றும் அன்பர்களும், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்களும் கனிவோடு நின்று பத்திமையோடு வணங்கினர். இறைவாழ்த்துடன் விழா தொடங்கிற்று. இருபெருவிழா ஆதலால் வரவேற்புரை முதலிய அங்கங்கள் இடம்பெற்றன.

சிவப்பணியைத்தவப்பணியாகக்கருதித்திருக்கோயில்திருப்பணி முதலிய பல நல்லறங்களை அகமகிழ்ந்து புரிந்துவக்கும் பெங்களூர் அன்பர் டாக்டர்.திரு.ம.வே.ஜெயராமன் அவர்களின் நல்லுளத்தை ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சிறப்பித்தார்கள். அவர்தம் பிறந்த ஊருக்கு அண்மையில் அமைந்த திருச்சேய்ஞலூர்ப் பெருமையை விளக்கி, சேக்கிழார் சண்டேசர் புராணத்தில் 'அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே' என அருளியதையும், அருளுபதேசப் பகுதியாகிய சிறுத்தொண்டர் புராணத்தில் ''தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவு'' என்று அருளியதையும் ஒப்பிட்டு விளக்கமருளி அருளுபதேசம் தொடங்கினார்கள்.

சிறுத்தொண்டர் புராணத்தைச் சுருக்கமாக அருளிச் செய்தார்கள். மனையறத்தின் வேர் ஆகி விளங்கிய திருவெண்காட்டு நங்கைபால் சீராளர் தேவர் அவதரித்தமை வரை முன்னே

அருளுபதேச விளக்கம் அமைந்தது. அதனை அடுத்துவரும் புராணப் பகுதிகள் இவ்வுபதேசத்தில் சுருக்கமாக அருளப்பட்டன.

சீராளதேவர் குலமுறைப்படி சடங்குகள் செய்யப் பெற்றுச் சீராக வளர்ந்தார். சிறுத்தொண்டர் கணபதீச்சரத்தில் திருத் தொண்டுகள் செய்தலும் மாகேசுவரபூசை செய்தலும் ஆகிய வற்றைக் குறைவறச் செய்து வந்தார். அந்நாளில் திருஞான சம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினர். சிறுத் தொண்டர் அவரை உள்ளன்போடு எதிர்சென்று வரவேற்றார்; தம் திருமனைக்கு எழுந்தருள்வித்தார்; திருவடி தொழுது வழிபட்டார். சம்பந்தர் அங்குச் சிலநாள் தங்கி, செங்காட்டங்குடி மேய செல் வனைத் தொழுது இருந்தார்; சிறுத்தொண்டர்க்கு, நண்பராகும் பேற்றினையும் தந்தார்; அவரைச் சிறப்பித்துப் பதிகத்தில் அமைத்துப் பாடினர். 'செடிநுகரும்' எனத் தொடங்கும் திருச்செங் காட்டங்குடிப் பதிகப் பாடலில்,

''பொடிநுகரும் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே''

(1-61-10)

என்பது அப்பகுதி.

திருச்செங்காட்டங்குடியில் சிவத்தொண்டு புரியும் சிறுத் தொண்டரின் மெய்யன்பினை நுகர விரும்பினர் கயிலைப்பெருமான்; திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினர்; அப்போது அவர் கொண்ட வேடம் பயிரவ சங்க வேடம். (பயிரவசங்கமர் - வயிரவ சமய அடியார்) வயிரவம் என்பது அகச்சமயம் ஆறனுள் ஒன்று. பைராகியாக - வயிரவராக எழுந்தருளிய பெருமான், பெரும் பசியுடையார் போல வழியிடையில் உள்ளோரிடம் சிறுத்தொண்டர் மனை எது எனக் கேட்டருளினர்; அவர்தம் திருமனை அடைந் தார். ''தொண்டர்க்கு எந்நாளும் சோறளிக்கும் சிறுத்தொண்டர் உள்ளாரோ?'' என வினவினர். அங்கிருந்த சந்தனத்தாதியார், இவர் சிவனடியார் என மனம் கொண்டார். ''அடியார்களைத் தேடிச் சிறுத்தொண்டர் சென்றுள்ளார்; விரைவில்வருவார்; இல்லத்தினுள் எழுந்தருள்க'' என்றார்; பைரவசங்கமர், ''பெண்கள் மட்டும் இருக்கும் இடத்தில் நாம் தனியே இருக்கமாட்டோம்'' என்றார். இது கேட்ட சிறுத்தொண்டரின் மனைவியார், இவ்வடியார் சென்று விட்டால் என் செய்வது எனக் கருதினர். வாயிற்புறம் வந்தார். "அடியேனுடையநாயகர், சிவனடியார்களைத் திருவமுதுசெய்விக்கும் நியமம் உடையவர்; அடியாரைத் தேடிச் சென்றுள்ளார். தேவரீர், எழுந்தருளியுள்ளீர்! இத்திருவேடம் கண்டால் தம் பெரிய பேறு

என்று மிகமகிழ்வார்; எழுந்தருளுக" என வேண்டினர். பயிரவ சங்கமர் இதுகேட்டு, "சிறுத்தொண்டர் வரும்வரை கணபதி ஈச்சரத்து ஆத்திமரத்தின் கீழ் இருப்போம்! நம் தன்மையைச் அவருக்குச் சொல்லுக" என அருளினர்; அங்குச் சென்று தங்கி யிருந்தார்!

பல இடங்களில் தேடியும் திருவமுது செய்விக்க அடியார் எவரும்கிடைக்காமல் சிறுத்தொண்டர் திரும்பினர். திருவெண்காட்டு நங்கையார் நிகழ்ந்தனவற்றைச் சிறுத்தொண்டர்க்குச் செப்பினர். சிறுத்தொண்டர் கணபதீச்சரம் சேர்ந்து ஆத்திமரத்தின்கீழ் அமர்ந்த உத்தராபதியாம் பயிரவ சங்கமரைக் கண்டார்; அவர் சூலமும் கபாலமும் ஏந்தி இருந்தார்; உடுக்கை கொண்டிருந்தார். சிறுத்தொண்டர் அவர் அருகணைந்தார் திருவடி தொழுதார். "நீர் தாம் பெரிய சிறுத்தொண்டரோ?" என்றார் பயிரவர். தம்மைப் பற்றிப் பணிந்து கூறிய சிறுத்தொண்டர் தம் திருமனைக்கு எழுந்தருளி அமுது செய்யுமாறு அவரிடம் வேண்டினர்.

சங்கமர், "நாம் உம்மைக் காணும் பொருட்டு வந்தோம்" எமக்கு அமுதூட்ட உம்மால் இயலாது" என்றார். சிறுத்தொண்டர், "சிவனடியார் கிடைக்கப் பெற்றால் அரியது என ஒன்றும் இல்லை" என்பணிந்து வேண்டினர். 'ஆறுமாதத்திற்கு ஒருமுறையாம் உண்போம்; ஒருபசுவினைக்கொன்று அமுதிட உண்பது எம நியமம்"- பயிரவர் இப்படிக் கூறினர்.

"நாம் உண்பது நரபசு; 5 வயதினதாய், உறுப்புக்குறை இல்லாததாய்ப் பழுது இல்லாததாக இருக்கவேண்டும் மேலும் ஒன்று உண்டுகேள்; அதுகேட்டால் நீ துன்பமுறுவாய்" என்றார் பயிரவசங்கமர். "அடியேனுக்கு அரியதுஒன்றும் இல்லை; விரைந்து அருள்க" என்றார் தொண்டர். "ஒரு குடிக்கு ஒரேமகனுமாகவும், நல்லவனுமாகவும் உள்ள ஒரு சிறுவனைத் தம்முள் மனம் மகிழ்ந்து தாய் பிடிக்க, தந்தை அரிய - குற்றமில்லாமல் சமைக்கப்பட்ட உணவையே நாம் உண்பது" என்று சங்கமர் மொழிந்தார். சிறுத் தொண்டர்" அடியேனுக்கு இதுவும் அரியதன்று" என்றார்; மனம் களித்தார்; சங்கமர் திருவடி மனம் பூண்டார்; திருமனை ஏகினர்.

பயிரவச் சங்கமர் கருத்தை மனைவிக்குக் கூறினர். "நிரம்பப் பொருள் கொடுத்தால் பிள்ளைகிடைத்தாலும் கிடைக்கலாம்! ஆனால் தம் மக்களைத் தாமே அரிந்து கறிசமைப்போர் உலகில் இல்லை! எனவே நீ பெற்ற மகனை இதன் பொருட்டு அழைப்போம்" என்றார் மனைவியாரும் இசைந்தார். சிறுத்தொண்டர், தம் மகன் சீராள தேவனைப் பள்ளியினின்று அழைத்து வந்தார்; நீராட்டினர் நங்கையார்; கோலம் செய்தார்.

அமுது செய்தற்குரிய இடத்தில் செல்லாது ஒரு மறைவிடத்தில் உலகினர் அறியாதவாறு இதனைச் செய்யத் தலைப்பட்டனர். பாத்திரங்கள் தூய்மை செய்யப்பட்டன. தந்தையார் சீராளர் தலையைப் பிடித்துக் கொண்டார்; தாயார் கால்களை மடியின் இடையே இடுக்கிக்கொண்டார். சீராளரோ தம் பெற்றோரும் மிக மகிழ்கின்றனர். எனக் கருதினார்; சிறுத்தொண்டர், தம் மகனார் தலையை அரிந்தார். 'இம் மகன் மெய்யாம் தன்மை தந்தான்' என மகிழ்ந்தனர் பெற்றோர். 'தலைக்கறி உதவாது' என்ச் சந்தனத்தாதியிடம் கொடுத்தனர். மற்றவைகளை நன்கு பக்குவமாக்கி உணவு சமைத்தனர்.

பயிரவ சங்கமரைத் திருவமுது கொள்ள அழைத்து வந்தார் சிறுத்தொண்டர். அடியார் வழிபாடு நடைபெற்றது. முக்காலியின் மேல் வெள்ளாடை இட்டு உண்கலம் திருத்தி அடியார் கூறியவாறு அனைத்துக்கறிகளும் படைத்தனர். "எல்லாக் கறிகளும் உணவோ?' என வினவினார் அடியார். "தலைக்கறி தவிரச் சமைத்தோம்" என்றனர் பெற்றோர். "அதனையும் நாம் உண்பது" என்றார் அடியார். அதுபோது சந்தனத்தாதியார் "அடியவர் அதனை உண்ண விரும்பினால் என் செய்வது? என அதனையும் கறியமைத்துள்ளேன்" என்றார். அதுவும் படைக்கப்பட்டது.

இவ்வளவும் ஆனபின் பயிரவசங்கமர் "தனித்து உண்ணும் பழக்கமில்லை; சிவனடியார் மற்றொருவர் இருப்பின் அழைத்து வருக" என்றார். சிறுத்தொண்டர் சென்று தேடினார்; மீண்டார். "ஒருவரும்கிடைத்திலர். அடியேனும் திருநீறு அணியும் தொண்டன்' என்றார். "உம்மினும் மிக்க தொண்டர் உளரோ! அமரும்" என்றார். பயிரவசங்கமர் சிறுத்தொண்டர் அடியாரை உண்பிக்க வேண்டி விரைந்து உண்ணபுகுந்தார். "நாம் ஆறுமாத காலத்திற்கு ஒருமுறை உண்போம்; நமக்கு முன்னே உண்ணும் காரணம் யாது? நம்முடன் உண்ணும்பொருட்டு உமக்குமகன் உண்டேல் அழையும்', என்றார் பயிரவசங்கமர். "இப்போது இங்கு அவன் உதவான்', என்றார் சிறுத்தொண்டர். "அவன் வந்த பின்பே நாம் உண்பது; அழையும்" என்றார் சங்கமர். தரிக்கலாற்றாது ஏங்கினார் சிறுத்தொண்டர்; திருமாளிகைப் புறத்தே சென்று, "மைந்தா வருக" எனக்கூவி அழைத்தார். அவர்மனைவியாரும் உடன்சென்று "செய்ய

மணியே! சீராளா! சிவனுர் அடியார் நாம் உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்ருர்'' என ஓலமிட்டார். சிவனருளால், சீராள தேவர் பள்ளியினின்று வருவார்போல் ஓடிவந்தார். நங்கையார் மகனைத்தழுவிக்கணவனுர் பால் தந்தார். விரைந்து உள்ளேபுக்கார் உள்ளிருந்த பயிரவசங்கமர் அதுபோது மறைந்தார்; மனம் கலங்கினுர் சிறுத்தொண்டர். பரிகலத்தில் இறைச்சியமுது காணுமையால் திகைத்தார். அவரைத் தேடியவாறு உள்ளே வந்தார். பயிரவசங்கமராகிய சிவபெருமான் உமையம்மையோடும் ஆறுமுகக் கடவுளோடும் வெள்விடையின் மேல் எழுந்தருளி அருள்நோக்கம் செய்தருளினுர். சோமஸ்கந்தப் பெருமானைச் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளர், தாதியர் ஆகியோர் கண்டு தொழுதனர். அவர்கள் நால்வருக்கும் என்றும் பிரியா திருக்குமாறு தம்முடன் அழைத்துச் சிவலோகப் பேறு அருளிச்செய்தார். சிவபெருமான்—என்பது வரையிலான சிறுத்தொண்டர் வரலாற்றை அருளிச்செய்தார்கள். இனியஉபதேசம் விழாக்களின் இணைப்புக் காரணமாகச் சுருக்கமாக நடைபெற்று நிறைந்தது.

உடலெல்லாம் அரிந்து கறிசமைத்ததனுல் அதனுடன் ஒத்து இணைவதற்குத் தலையையும் அரிந்து கறிசமைத்தால் தான் பொருந்துவதாயிருக்கும். தலைதனியாகவும் மற்ற உறுப்புக்கள் குழைவாகவும் இருந்தால் ஒட்டிப் பொருந்தல் இயலாது. இதனைத் திருவருள் சந்தனத்தாதியார் மூலம் செயற்படுத்தியது. இதனைக் குறிப்பால் உணர்த்து முகத்தாற்ருன் தலைக்கறியும் நாம் உண்பது என்றருளினுர் பயிரவ வேடத்துடன் வந்த இறைவன், என்று விளக்கினுர்கள். இது மிகவும் அறிவிற்குப் பொருத்தமான ஆய்வு விருந்தாக அமைந்தது.

அன்பர்கள் இன்சுவைக் கனிச்சாறு பருகினர்; இனிய நினைவுகளோடு இல்லம் ஏகினர்.

வாழ்க குருமணிகள் !

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு விபவ - ஆடி 28 ஆம் நாள் 12—8—88 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ அப்பர் சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளும் கயிலைக் கண்ட திருநாளில் சிறப்பாக நடைபெற்றது. "திருக்கயிலாயத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிடப்பெற்றது. தருமபுரம் ஸ்ரீ சொக்கநாதர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. திருக்கயிலாய நிலையத்தில் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. பக்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 81 ஆம் அருளுபதேசம் 4—9—88 அன்று ஆதீன ஆகமக்கட்டில் திருமுறை இசையுடன் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனக் கலைக் கல்லூரி பி. காம். வகுப்புத் தொடக்கவிழாவும் இதனுடன் இணைந்து குருவருள் துணைகொண்டு நிகழ்ந்தது. (பி. காம் வகுப்புத் தொடக்க விழாபற்றிய செய்தி இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.)

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணத்தில் சிறுத்தொண்டர் புராணம் அருள்கின்றார்கள்; திருமுறைகள், சாத்திரங்கள், இலக்கியமேற்கோள்கள் அமையச் சைவ சித்தாந்த தத்துவ விளக்கம் அருள்கின்றார்கள். இம்மாதம் சிறுத்தொண்டர் வரலாற்றைச் சுருக்கமாக அருளிச் செய்தார்கள். ஆதீன அடியார்கள், அன்பர்கள், கல்வி நிலையங்களின் மாணவ மாணவியர், ஆசிரியர்கள் ஆகியோர் அருளுபதேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயன் பெற்றனர்

அடுத்து 88 ஆம் அருளுபதேசம் 2—10—88 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளாசி பெறுவார்களாக.

மகாகயிலாயக்காட்சி

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலை கண்ட திருநாளாகிய ஆடி அமாவாசைநாளில் தருமை ஆதீனம் 25 ஆவதுகுருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் மகாகயிலாயக் காட்சியின் 29 ஆவது

ஆண்டு விழா 12—8—88 வெள்ளிக்கிழமையன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூசைமடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினார்கள். பண்ணிசைவாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக ஓதப்பெற்றது. நண்பகல் ஒரு மணிக்கு மாகேசுவரபூஜை நடைபெற்றது.

மாலை 6 மணி அளவில் தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடத்தில் 'திருக்கயிலாயச் சிந்தனை' என்ற தலைப்பில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., காரைக்கால் அம்மையார் பற்றியும், வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., திருஞானசம்பந்தர் பற்றியும், வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., திருநாவுக்கரசர் பற்றியும், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம்.ஏ., பிஎச். டி., சுந்தரர்பற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ:, பி. எட்., சேக்கிழார் பற்றியும் உரையாற்றினர்.

இரவு வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி ரதத்தில் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருக்கயிலாயத் திருவுருவப்பட வீதியுலா சிறப்பாக நடைபெற்றது. திருக்கயிலாய நிலையத்தில் தரிசனவழிபாடு நிகழ்ந்தது. அதுபோது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஆதீனத்திற் 'பயின்று, ஆதீனத்தில் ஓதுவாமூர்த்தியாகப் பணியாற்றிவரும் திரு. சி. சங்கர சுப்பிரமணியனுக்குப் பொன்னுடை வழங்கி ஆசியருளினார்கள்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அடியார்கள், திருமுறை இசைவாணர்கள், புலவர்கள், பக்தர்கள், அலுவலர்கள் புடைசூழத் திருவுலாப் போந்தருளினார்கள். அன்பர்கள் வழிபட்டுப் பயனடைந்தனர்.

தருமை ஆதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா பட்டமளிப்பு விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூஜைமடத்தில் ஆவணி மூலப் பெருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்பெறுகின்றது. இவ்வாண்டும் 17—8—88 புதன்கிழமை முதல் 26—8—88 வெள்ளிக்கிழமை வரை பெருவிழா நிகழ்ந்தது. நாள்தோறும் காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். பத்து நாட்களிலும் மாலை 6 மணி முதல் பூஜைமடத்தில் தக்கபுலவர்களைக் கொண்டு திருவிளையாடற் புராணத் தொடர் விரிவுரை நிகழ்த்துவிக்கப்பெற்றது. தருமை ஆதீனத்தில் 21—8—88, 22—8—88,

23—8—88 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும் தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

23—8—88 செவ்வாய்க்கிழமை ஆவணிமூலத் திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. "ஸ்ரீ சொக்கநாத சுவாமி திருஅருட்பா" என்ற நூல் விழாமலராக வெளியிடப்பெற்றது.

இந்நாளில் ஆண்டு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அறிஞர் ஒருவருக்குப் பட்டமளித்து ஆசியருள்வார்கள், இவ்வாண்டு வரை 38 அறிஞர்கள் பட்டமளித்து ஆசிவழங்கப்பெற்றுள்ளனர். இவ்வாண்டு ஸ்ரீ சொக்கநாதர் பூஜைமடத்தில் மாலை வழிபாட்டின் போது பாண்டிச்சேரி, பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வு நிறுவன இயக்குநர் திரு. N. R. பட் அவர்களுக்கு, இண்டை மாலை சூட்டி, பொன்னுடை போர்த்தி "சிவாகமசேகரன்" என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கியருளினார்கள். மாலைவழிபாட்டின் போது கற்கண்டுப் பொங்கல் பாவாடை நிவேதனச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது.

ஆவணிமூலப் பெருவிழாவையொட்டி மூன்று நாட்கள் தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நடைபெற்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்க பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா 21—8—88 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்குத் தருமைத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. தேவார பாடசாலை வேதசிவாகமப் பாடசாலை ஆண்டுவிழா 22—8—88 திங்கட்கிழமை கமலைத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. இவ்விரு நாட்களிலும் தருமை ஆதீனக் கலைக் கல்லூரி ஆசிரியர்கள் விரிவுரையாற்றினர். தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, அனைத்துலகச் சைவசிந்தாந்த ஆராய்ச்சி நிறுவன ஆண்டுவிழா 23—8—68 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு, கூடல் திருநாளாக நடைபெற்றது. இறை வணக்கத்தின் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியுரை வழங்கினார்கள். டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., பிஎச். டி., 'மண்சுமந்த திருவிளையாடல்' பற்றி உரை நிகழ்த்தினார். பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வுநிறுவனம், வடமொழி ஆய்வுத்துறைப்பேராசிரியர் திரு. ஆர். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் திரு. N. R. பட் அவர்களைப் பாராட்டிப்பேசினார். 'சிவாகம சேகரன்' திரு. N. R. பட் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பேரருள் திறத்தினைப் போற்றி நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

விழா நிறைவில் தருமை ஆதீனக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. திருமுறை வாழ்த்துடன் விழா இனிதே நிகழ்வுற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு நிவேதித்த கற்கண்டுச் சர்க்கரைப் பொங்கல் பிரசாதத்தை அன்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கியருளினர்கள்.

குமரகோயில்
ஸ்ரீ பார்வதி அம்மை உடனுகிய ஸ்ரீ கைலாசநாதசுவாமி ஸ்ரீ சண்முக சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழா

செம்பொனார்கோயிலின் வடபால் மகாராஜபுரம் என வழங்கும் திருச்செம்பள்ளி 'சிவப்பள்ளி' என்னும் தேவார வைப்புத் தலமாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவுத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறிப்பிட்டுத் திருத்தாண்டகம் அருளியுள்ளார். சிவப்பள்ளி என்னும் பெயர், 'திரு' என்னும் அடைமொழி சேர்க்கப் பெற்று, திருச்சிவன்பள்ளி என்றும் திருச்சிவம்பள்ளி என்றும் மாறி, திருச்செம்பள்ளி என்று மக்கள் வழக்கில் வழங்கலாயிற்று. தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் 'மகாராஜபுரம்' எனவும் பெயர் பெற்றது. சிவப்பள்ளி ஆலயம் சிதைவுற்ற நிலையில் அங்கிருந்த ஸ்ரீ கைலாசநாதரையும் ஸ்ரீ பார்வதிதேவியையும் குமரகோயிலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். குமரகோயில் ஆலயம் இதுபொழுது திருப்பணி செய்யப்பெற்று, ஸ்ரீ சண்முகசுப்பிரமணிய சுவாமிக்கு முன்புள்ள மகாமண்டபத்தில் இருபுறங்களிலும் சுவாமி அம்பாள் சோமாஸ்கந்தர் வடிவில் அமையுமாறு விமானங்கள் அமைத்து, சச்சிதானந்த சொரூபமாக உள்ள இக்கோயில் மகா கும்பாபிஷேகம், விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 13 ஆம் நாள் (29—8—88) திங்கட்கிழமையன்று காலை 9-00 மணி அளவில் நிகழ்வுற்றது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருவருட் பிரசாதம் வழங்கினர்கள். 'திருச்சிவப்பள்ளித் தலச்சிறப்பும் கந்தர் அநுபூதியும்' என்ற நூல் வெளியிடப்பெற்றது.

தருமை ஆதீனம் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருச்செம்பள்ளிக்கு அருகில் உள்ள மேலப்பாதி என்னும் ஊரில் தோன்றிக் குமரகோயில் முருகனைப் பக்தியோடு வழிபட்டு வந்ததன் நினைவாக இக்கோயில் வழிபாட்டுக்கு அறக்கட்டளை அமைத்துள்ளார்கள். அது குமரகோயில் குமரக்கட்டளை என்னும் பெயரில் தருமை ஆதீனப் பராமரிப்பில் நிர்வகிக்கப்பட்டு வழிபாடுகள் செய்விக்கப் பெற்று வருகின்றன.

இக்குமரக்கட்டளையின் சார்பில் மகாகும்பாபிஷேக விழாவின் அங்கமாக 26—8—88 முதல் 28—8—88 வரை மாலையில் சமயப் பேரவை நிகழ்ச்சிகள் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அருளாணைவண்ணம் தக்க புலவர்களைக் கொண்டு நிகழ்த்துவிக்கப்பெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் சமயப் பேரவையைத் தொடக்கி வைத்து ஆசி யருளினார்கள். அன்பர்கள் சமயப்பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவுகளைக் கேட்டும், கும்பாபிஷேக தரிசனம் செய்தும் பயனடைந்தனர்.

தருமை ஆதீனம் கலைக் கல்லூரியில்
பி. காம்., வகுப்புத் தொடக்க விழா

தருமை ஆதீனம் கலைக் கல்லூரியில் தமிழ் பி. லிட், எம். ஏ, எம். ஃபில் வகுப்புக்களோடு கலைப்பிரிவில் ஒன்றாகிய பி. காம் வகுப்பையும் தொடங்க வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் திருவுளம் பற்றினார்கள். 1988-89 ஆம் கல்வியாண்டி லேயே அவ்வகுப்பைத் தொடங்கிநடத்தத் திருச்சிராப்பள்ளி பாரதி தாசன் பல்கலைக் கழகம் அனுமதி அளித்தது. 40 மாணவர்கள் இவ்வகுப்பில் சேர்க்கப் பெற்றனர். ஆசிரியர் மூவர் இவ்வகுப்புக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

பி. காம் வகுப்பின் முறையான தொடக்க விழா 4—9—88 ஞாயிறு காலை நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கி யருளினார்கள்.

கன்னட மாநிலத்தில் முறையான பல கல்வி நிறுவனங்களை நடத்தி வருபவரும், நமது ஆதீனத்தில் செந்தமிழ்ச்செல்வர் எனப் பட்டமளித்துப் பாராட்டப் பெற்றவருமான டாக்டர் திரு. எம். வி. ஜயராமன் அவர்கள் வகுப்பைத் தொடங்கிவைத்துச் சிறப்புரை யாற்றி மகிழ்வித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அண்மையில் மணி விழாக் கொண்டு அருளாசி பெற வருகை தந்த திரு. எம். வி. ஜயராமன் அவர்களுக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி இராஜலட்சுமி அம்மையார் அவர்களுக்கும் பொன்னுடைகள் போர்த்தி, மலர்மாலைகள் அணிவித்து நெட்டியினாலாகிய கலை நலம் மிக்க தஞ்சைப் பெரிய கோயில் மாதிரியைப் பரிசாக வழங்கி ஆசியருளினார்கள்.

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ, வரவேற்புரை கூறினார்.

அன்பநாதபுரம் அறத்துறைக் கல்லூரி முதல்வர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் எம், ஏ. அவர்களும், அ, வ. அ. கல்லூரி வணிக இயல் துறைத் தலைவர் திரு, எஸ். வெங்கட்ராமன் அவர் களும் வாழ்த்துரை கூறினர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—9—88 முதல் 16—10—88 முடிய)

விபவஹு ஆவணிமீ 31உ சுக்கிரவாரம் விசாக நக்ஷத்திரம் கௌலவ கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 43 நாழிகை 24 விநாடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான ஸ்ரீ சூரிய பகவான் உலகபிரஜைகள் சரஸ்வதித்துவ கல்வி கலை ஞானங்களில் விஞ்ஞானநுட்ப ஆய்வுகளில் அறிவு தீட்சண்யத்தில் விளங்கவும், செயல்திறனில் சிறந்து திருமகள் கடாட்சமாக விளங்கவும், அனுக்கிரகம் பாலித்தவண்ணம் சிம்ம ராசியினின்றும் கன்னியாராசி சங்கிரமணமாகப் புரட்டாசி மாதப் பிரவேசம் செய்தருள்கின்றார். சங்கிரமணகால கிரகஸ்திதியாவது சங்கிரமண இலக்கினமாகிய ரிஷபத்திற்கு கேந்திர திரிகோணங்களில் கிரகங்கள் வலிமை பெற்றுள்ளன. இதனால் கல்விச் சாலைகளில் மாணாக்கர்களுக்குப் புதிய முறையில் உலகியல் அறிஞர்களின் கோட்பாட்டின்படிக்கு, ஆசிரியர் பெருமக்கள் சாதனைபுரிந்து கல்வி போதித்துவருவர். மக்கள் விவசாயத்தொழில் இயந்திரத் தொழில் களில் முன்னோடித் திட்டங்கொண்டு உற்பத்தி பெருக்குவர். விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பினின்றும் தொழில் சாதனங்கள் நவீன உபயோகப்பொருள்கள் வெகுவாகவந்து பிரஜைகளுக்குப் பயன்படும். நாடுகளில் எங்கும் சித்திரம், சிற்பம், சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகள் நாகரிக முயற்சியில் மிளிரும். கலைஞர்கள் கலைகள் உலகில் நீடித்துத் திகழும் பொருட்டு சிஷ்யர்களுக்கு போதனைசெய்து மகிழ்வர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவனருளில் சிவனையே பூசிக்கும்பாக்கியத்தில் வந்து ஞானஜோதியாக திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் உலகில் இறை கட்டளை நிறைவுறும் பொருட்டு மாந்தர்களின் பிறவி வினைகள் நீங்கவும், நற்சிந்தை நற்செயல் நல்ல புண்ணியங்களுக்கு ஆசாரிய தர்மமாக எல்லோரும் வேதங்கள் சாஸ்திரங்கள்பயிலவும்,

தெய்வழிபாடு இறைவன் நாமாவளி ஸ்தோத்திரம் வேதம் ஓதி தங்களில் மனம் ஒருவழிபடுத்தி நற்செயலாற்றவும், தம்வழி ஸ்ரீமத் தபபிரான்சுவாமிகளின் மூலமாகப் போதனை செய்வித்து, அனைவரும் வாழ்க்கையில் செம்மையுற ஆசீர்வதித்து அருள்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானம் பெருமதிப்பில் வந்துசேரும். பொன்மணி பூஷணம்தரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷமான பலனையளிக்கும். வாகனசுகம் திருப்தியளிக்கும். அடுத்தடுத்துப் பொது நலன்களில் ஈடுபாடு ஆகும். மேன்மை ஸ்திதியும் எல்லாவற்றிலும் ஜெயமும் ஏற்படும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். செப்டம்பர் 17, 18, அக்டோபர் 14, 15 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். பூமி இயந்திரங்களில் விருத்தி பலன் ஏற்படும். ஓர் வெளுமை வஸ்துவில் பிராப்தியையளிக்கும். புத்திரர்களுக்குக் கல்வி கலை ஞானங்களில் உத்யோகத்தில் உயர்வளிக்கும். எல்லாக்காரியங்களையும் செவ்வையாக நடத்தும். செப்டம்பர் 19, 20 அக்டோபர் 16 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நிறைய வந்து சேரும். சுப விசேஷ செலவும் செய்யும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மையை உண்டுபண்ணும். ஸ்லாக்கிய பலன் தரும். சத்துருபங்கம் ரோக நிவர்த்தி ஆகும். எல்லாக்காரியங்களையும் கெடியான தோரணையில் நடத்திவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் வரும். இரத்தினபூஷணம் அளிக்கும். நல்லவாகனப்பிராப்தி, பசுபால் பிராப்தி அளிக்கும். தெய்வதரிசனம் நல்லவர் அன்பர்களின் வருகை, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் போற்றுதல்கள் அரசகண்யம் தரும். எல்லாக் காரியங்களும் சைகைக் குறிப்பில் நன்றாக நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கண்ணியஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். இலட்சியப் போக்கில் நற்காரியச் செலவினங்களையும் ஏற்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் புகழும் அரசாங்கத்தில் நல்லன ஏற்படுதலும் ஆகும். எல்லாக்காரியங்களும் சமூக நலன் கண்டு உறுதிப்பாடாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் வெகுவாக வரும். திடசித்தம் தரும். தெய்வஸ்தலம் சென்று வருதல் ஆகும். குருமார்களிடம் ஆசிபெறுதல் நல்லோர்களிடம் உரையாடுதல் ஆகும். சமூக நற்செயல் புரிய ஊக்குவிக்கும். நற்பாக்கியம் தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். எல்லாக்காரியங்களும் அரசகெடியில் நடந்து கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில்பிணக்கு, சுமுகம் கலந்து காணும். செப்டம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வரும். செப்டம்பர் 29உ ஆனல் ஓர் பெரும் பொருள் கைக்கு வரும். பொதுநல நிர்வாகத்தில் பொறுப்பு ஏற்கும். நெறிமுறை வற்புறுத்தலில் பணியாளர் உடன் இருப்போர் மனக்கசப்புறினும் பின்னர்ப் போற்றுவர். திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாய்ச் செயல்படும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 30, அக்டோபர் 1 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்கத்திலிருந்து வெகுமதிகள் வருதல், உத்தியோகத்தில் உயர்பதவி ஏற்படுதல் ஆகும். நவீன பொருள் ஒன்று வாங்குதல் ஆகும். தெய்வதரிசனம், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் ஏற்படும். எல்லாக்காரியங்களும் புத்திமேம்பாட்டில் கெடியான தோரணையில் நடந்துகொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் நிம்மதியாக நடந்துவரும். அக்டோபர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வரும். குடும்ப நலன்களுக்கு முதலீடு செய்தல் ஆகும். வித்துவத்துவம்கலைத்துறைகளில் நன்மைகளை ஏற்படுத்தும். உத்தி யோகத்தில் உயர்வும் போற்றுதல் சம்பவங்களும் ஏற்படும். சமூகத் தினருக்கு நன்மை செய்தல், மன மாறுதலில் இருந்தவர் வந்து கூடுதல் ஆகும். மனைவி, மைந்தர்களின் நலம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 4, 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நல்ல வகையில்வரும். மனோதிடம்அளிக்கும். சகோதரர் சகோதரிகளி ன்அனுசரணை, புத்திரர்களுக்குக் கல்வி கலைகளில் முன்னேற்றம்தரும். ஸ்ரீதுர்க்கை ஹனுமார் ஸ்தோத்திரம் செய்வ தினின்றும் ஸ்திரிகிலேசம் கிரியைகளில் மந்த ஸ்திதி நீங்கி சௌக்கியமும் வெற்றியும் தரும். சத்துருபங்கம் ஆகும். எல்லாக் காரியங்களும் தெய்வபலனினால் நல்ல விதமாக நடந்துவரும். அக்டோபர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் இராஜகண்யத்திலேயே வரும். வாக்கு பலனில் அவசர எச்சரிக்கை வெளியிடுதல் ஆகும். சாஸ்திரோக்த அனுஷ்டானாதி செயல்கள் செம்மையுறும். சமூகத்தினருக்கு ஊக்குவிப்பு, கொடை களும் பராமரிப்பும் அளிக்கும். தேங்கியிருந்த அலுவல்கள் பூர்த்தி யாகும். அரசாங்கத்திலிருந்து லிகிதம் வந்து நல்ல காரியங்கள் துரிதப்படும். தாரபுத்திரர்கள் மனோபாவத்துக்கு ஏற்ப நடந்து கொள்வர். அக்டோபர் 9, 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத் துறையில் உயர் ஸ்திதி யளிக்கும். சாஸ்திர சம்பிரதாயங்களை அனுஷ்டித்தல் ஆகும். மனம் அமைதியுறுதல் ஆகும். சகோதரர் உயர் ஸ்திதிக்கு வருவர். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்களுக்கு மேன்மையை உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் புண்ணியசெயல்களுடன் இனிது நடந்து வரும். அக்டோபர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV
பாடம் - 8.

பண்டார சாத்திரங்கள் :

"வர்ணாச்சரம சந்திரிகா"

திரு. V. கணேசன்

1. நூல் பெயர் :

''வர்ணாச்சரம சந்திரிகா'' என்று பெயர். இது வடமொழியில் காமிகாதி ஆகமங்களிலும், இன்னும் பற்பல க்ரந்தங்களில் இருந்தும் பல உதாரண விளக்கத்தோடு தொகுத்து எழுதப்பட்ட ஓர் அற்புதமான நூலாகும்.

2. பெயருக்கான தமிழ் விளக்கம் :

''வர்ணாச்சரம சந்திரிகா'' என்ற இந்நூல் பற்பல நூல்களில் கூறப்பட்ட சைவாகம பிரசித்தமான கர்மங்களிலும் நான்கு வர்ணத்தாருக்கும் நான்கு ஆச்ரமங்களிலும் தகுதி உண்டுஎன்பதைப் பல சான்றுகளின் மூலம் ஒரு சேர எடுத்துக்காட்டுவதால் "சந்திரிகா'' எனப்பெயர் கூறுவர். வர்ணம் என்பதற்கு இருபொருள் உண்டு. ஒன்று அகாரம் (எழுத்து), மற்றொன்று ஜாதி எனப் பொருள்படும். இங்கு வர்ணம் என்றால் ஜாதி. அதாவது நான்கு வர்ணத்தாருக்கும் நான்கு ஆசிரமங்களிலும், ஆகம சம்பந்தமான சகல காரியங்களிலும் அதிகாரம் உண்டு என இந்நூல் கூறுகிறது. பற்பல சாஸ்திரார்த்தத்தை ஒரு சேரத் தொகுத்துக் கூறுவதை ''சந்திரிகா'' எனக் கூறுவர். சந்திரன் மூலப்பொருள். அதனுடைய ஒளியை, சந்திரிகா என்று கூறுவார்கள். சந்திரன் போன்ற பற்பல நூல்களில் உள்ள வர்ணபேதம், ஆசிரம விஷயங்களின் பேதம், சைவாகமக் கிரியைகளில் அதிகாரம் இவைகளைச் சாராம்சமாக வழங்குவது சந்திரிகா போன்றதாகும். அதனால் தான் சந்திரிகா எனக் கூறப்பட்டுள்ளது.

3. நூல் ஆசிரியர், பெயர், பெருமை, காலம் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ மெய்கண்ட சந்தான ஞானபீடாதிபதியாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

முதற்கொண்டு ஏழாவது பீடாதிபதியாக விளங்கிய சுத்தாத்வைத சைவசித்தாந்த சார்வபௌமரான ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகேந்திர சுவாமிகள் அவர்கள் ஓர் சிறந்த தொகுப்புநூலாக இதனைச் செய்துள்ளார்கள். இவர் வடமொழி, தென் மொழிகளில் அதி வல்லுநராய்ச் சிவாகம புராணங்களிலும், தர்க்க வியாகரணங் களிலும் திராவிட வேதமாகிய பன்னிரு திருமுறையிலும், வேதாகம நுண்பொருளை நுவலுஞ் சைவசித்தாந்த சாஸ்திரத்திலும் மிகுந்த வல்லமை பெற்ற ஒப்பற்ற ஞானாசார்ய பெருந்தகையாவர்.

திருவையாற்றுப் புராணம், ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகர் காலத்தில் செய்யப்பட்டதெனத் தெரிவதால், அந்தப் புராணத்தில் காரணமும், காலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவையாற்றுப் புராணம் இயற்றிய காலம் கி. பி. 1605 ஆதலால் இந்நூல் தோன்றிய காலம் கி. பி. 1600 ஆம் வருடமாயிருக்கலாம். மேலும் திருவையாற்றுப் புராணம் பாடுவதற்குச் சில ஆண்டுகள் முன்னரே செய்யப்பட்டதெனத் தெரிய வருவதால் இன்றைக்குச் சுமார் 388 வருடங்களுக்கு முன்னரே வர்ணச்சரம சந்திரிகா இயற்றப் பெற்றதாகக் கொள்ளமுடிகிறது. அதாவது பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்ள இயலுகிறது.

4. நூல் செய்யவேண்டிய அவசியம் :

இந்த நூல் ஏன் செய்யவேண்டும் என்று நாம் நோக்குங்கால் இதனுடைய அவசியத்தை இந்நூலின் முகவுரையில் மிக மிகத் தெளிவாக – சந்தேகத்தைப் போக்கக் கூடிய அளவில் இந்நூல் ஆசிரியர் கூறியதை நன்கு எடுத்து உரைத்துள்ளார்கள். அதனை இனிச் சுருக்கமாகக் காண்போம்.

ஒரு சமயம் தஞ்சை மாநகரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டையாண்டுவந்த ஓர் அரசன் தனது நான்குவகைச் சேனைகள் புடைசூழக் காவிரிப்பூம்பட்டினம் நோக்கிச் சென்றான். அப்படிச் செல்லும் நேரத்தில் மயிலாடுதுறைக்குச் சமீபமான தருமபுரமாகிய ஞான நகரை அடையும் தருணத்தில் இரவு நேரம் வந்துவிடவே, ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமானுடைய அர்த்தஜாம காலஆராதனை நடக்கக் கண்டு தனது ஊர்தியிலிருந்து கீழே இறங்கி வழிபட்டான். அந்தச் சமயத்தில் அரசர் சமீபத்தில் இருந்த சிலர், "இஃது ஓர் சூத்திரர்சமாதி, அரச குலத்தவராகிய தாங்கள் இதனைத் தரிசித்தல் கூடாது எனவும், இனி ஏனையோரும் இக்குற்றத்திற்கு ஆளாகா வண்ணம் இவ்வாலயத்தையே எடுத்து விடல் வேண்டும் எனவும்

கூற அதற்கு அரசன் தன் பரிஜனங்களை ஏவ, அவர்களும் அவ்வாறே செய்கையில், இடித்தஇடத்தில் இருந்து இரத்தம்வருவதைக்கண்ட ஏனையோரும் மயக்கமுற்று விழுந்தார்கள். கடலாடச் சென்ற அரசனுக்குப் பாதி வழியிலேயே இரண்டு கண்களும் பார்வை அற்றதாகவும், மற்றவர்களுக்கு வாய் பேச முடியாமலும் ஆயிற்று.

இதை உணர்ந்த அரசன் தனது தவற்றை எண்ணி மீண்டும் தருமபுரம் வந்து ஞானசாரிய ஸ்வாமிகளை வணங்கியவுடன் ஓர் கண் ஒளிபெற்று, அவரிடம் மற்றொரு கண் ஒளி வழங்குமாறு வேண்ட, ஒரு மண்டலம் இங்குத் தங்கி வழிபட மற்றொரு கண் ஒளி வரும் என்று கூற, அவ்வாறேசெய்ய அரசன் மற்றொரு கண்ஒளியும் ஏனையோர் பேசும் திறமையும் மீளப்பெற்றார்கள் என்பது வரலாறு. அரசன் தன் பிழையை உணர்ந்து ஞானசாரியஸ்வாமிகளிடம் விக்ஞாபனத்தோடு தன் சந்தேகத்தைக்கேட்டான். தாங்கள் நான்காவது வர்ணத்தைச்சார்ந்தவர் என்றும் தங்களுக்கு சந்நியாச ஆசிரமத்தில் அதிகாரம் இல்லை என்றும், தன் சமீபத்தில் உள்ளார் கூறித் தன்னை மயக்கிவிட்டார்கள்; இவ்வுண்மையைத் தனக்கு அனுக்கிரஹம் செய்ய வேண்டும் எனப் பிரார்த்தித்தான், அவரும் திருவுளம் கொண்டு, சைவாகமப் பிரமாணம் மற்றும் புராண, இதிகாசங்கள் முதலிய பிரபலமான க்ரந்தங்களில் இருந்து சைவ சந்நியாசி சமாதி விதியீருக அமைத்து நான்கு வர்ணத்திற்கும் நான்கு ஆசிரமங்களும் உண்டு எனப் பிரபல பிரமாணங்களோடு சங்கோத்தரமாக (வினு – விடையாக) வருணச்ரம சந்திரிகை என்ற நூலைத் தொகுத்து அருளினுர் என்பது வரலாறு. நூல் செய்ய வேண்டிய அவசியம் இவ்வரலாற்ருல் நமக்கு நன்கு புலனுகிறது.

பல்வேறு இடங்களில் ஆகமங்களில் அருளப்பட்டு இருக்கும் செய்திகளின் சாரத்தை ஒருசேரத்திரட்டி எளிய இனிய சமஸ்க்ருத பாஷையில் இந்நூலைச்சமைத்து இருக்கிருர். இந்நூலில் அறிவிக்கப் படும் கருத்துகள் எல்லாம், ஆகமங்களினுல் மற்ற புராண, ஸூதசம்ஹிதை முதலான 85 நூல்களினுலும் அருளப்பட்டவை என்பதைத் தெளிவாகக் காட்டியே இந்நூலைக் கொண்டு செலுத்துகிருர். இந்தவகையில் இந்த நூல் ஒரு சிறந்த தொகுப்பு நூலாகும் என்று கருத இடமுண்டு.

"சைவாகம சாஸ்த்தி ரேப்ய: ஸங்க்ரு ஹியா:
ஆச்ரபிணும் முதே"

என்று முகவுரையில் கூறப்படுவதிலிருந்து இது தொகுப்பு நூல் என்று நாம் உணர முடிகிறது.

நூலில் கூறப்படுள்ள விஷயம்:-(முதலில் ஆகமப்ரமாணம்)

(1) சைவாகமத்தில் ப்ரசித்தமான சகல கர்மாக்களிலும் நான்கு வர்ணத்தார்களுடைய நான்கு ஆச்ரமங்களில் அதிகாரம் உண்டெனக் கூறப்படுகிறது

வாயு சம்ஹிதை என்ற நூலில் சிவாகம ஞானமே சாலச் சிறந்தது என்று கூறப்படுகிறது.

"சிவாகமோக்தம் யது ஞானம் ததத்ர ஞானமுச்யதே ஸ்ரீ கண்டேந சிவே நைவ சிவாயை ஸ சிவாகம்"

என்று கூறப்பட்டுள்ளது. மேலும் புராணங்களைக் காட்டிலும் இந்த காமிகாதி ஆகமங்கள் உயர்ந்தது எனச் சொல்லப்பட்டு இருக்கிறது. சூதசம்ஹிதையில் 'காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களும் பரமேஸ்வரனுடைய முககமலங்களிலிருந்து வெளிவந்தன. எப்படி நான்கு வேதமும், தத்புருஷ, அகோர' வாமதேவ, ஸத்யோஜாத முகங்களில் இருந்து முறையே, ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் வெளிவந்ததோ அதுபோல, என்று ஹாலாஸிய மஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளதை இந்நூல் கூறுகிறது. இதற்குச் சான்று காமிகாகமத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று உள்ளது.

"ஈசான வக்த்ராது ஊரித்வஸ்தாது ஞானம் யத் காமி காதிகம்
ரிக்யஜுஸ்ஸாமாதர்வர்ச்ச புருஷாத்யாநநொத்பவா:"॥

காமிகாகமத்தின் வாக்கியத்தை இங்கு மேற்கோள் காட்டியுள்ளார்கள். மேலும், வேதநெறியில் பின்பற்றி வாழ்கின்ற ஒரு மனிதன் அதிலிருந்து நழுவி விட்டால் அதற்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளத் தந்திரம் என்ற ஆகமத்தை அனுஷ்டிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இதற்குச் சான்றாக சூத சம்ஹிதையில் இருந்து, "வேதேதராகமம் கத்வா ததுக்தம் தர்மமாசரேது" என்பதை மேற்கோள்களாகக் காட்டுகிறார். மேலும் வேதம் அபௌருதேயம். ஆகமம் பௌருதேயம். வேதத்திற்குப் புறம்பானது என்று சிலர் கூறுவார்கள். அது முறையன்று. ஆகமம் அனுசாரிஎன்றும்,வேதத்திற்குப்புறம்பானதுஎன்றும்கூறப்பட்டமை இங்கு நாம் நினைவு கொள்ளத்தக்கது. வேதமார்க்கத்தில் இருந்து நழுவியவர்களுக்குத் தந்திரம் என்று சொல்லக்கூடிய ஆகமத்தில் அதிகாரம் உண்டு. அதுவும் வேத மார்க்கத்தை அனுசரித்தவை 28 ஆகமம் தான். வேதமார்க்கத்தை அனுசரிக்காத ஆகமங்கள், வாமம், பாசுபதம், லாகுளம், பைரவம் என்ற நான்கே ஆகும். இதை நாம் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது அல்ல. ஏன் என்றால் கௌதமமுனி

சாபத்திற்கு உட்பட்டவர் அதை அனுஷ்டிக்கக் கடவர் என்ற சாபம் ஒன்று உள்ளது. ஆகையினால் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களும் வேதானுசாரிகள். இந்த ஆகமங்கள் 'ஸ்வதந்திரம்' என்றும், இதரம் என்றும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. அதாவது ச்ரௌதம், அச்ரௌதம் எனக்கூறுவர். காமிகாதி 28 ஆகமங்கள் ச்ரௌதம்; மற்றவை அச்ரௌதம்.

ஸூதகீதையில் "ச்ரௌதாச்ரௌத விபேதேந த்விதஸ்து சிவாகம" என்று கூறப்பட்டுள்ளது.

ஆகமநூல் பிரமாணமாகும், ஏன் என்றால் வேதம் எவ்வாறு நித்யமோ அதுபோல் ஆகமமும் நித்யமாகும். இது எவ்வாறு என்று காமிகாமத்தில் கூறப்பட்டுள்ளது.

"ஈசானவக்த்ராதூர்த்வஸ்தாது ஞாநம்யத் காமிகாதிகம்,
ரிக் யஜுஸ்ஸாமாதர்வாச்ச புருஷாத்யாத நொத்பவே"

என்றுவேதம் பிரமாணம்போல்ஆகமமும்பிரமாணமாகும்.வேதத்தில் அதிகாரம் அற்றவர்களுக்கு வேத அனுசாரியான ஆகமத்தில் அதிகாரம் கூறப்பட்டுள்ளது. வேதமார்க்கத்தைப்பின்பற்றமுடியாதவர்கள் தந்திரம் என்று சொல்லக்கூடிய ஆகம மார்க்கத்தில் பின்பற்றத்தகுதி உடையவர் ஆவார்கள். குறிப்பாகச் சொல்வோமாகில் நான்காம் வருணத்திற்கு இதில் அதிகாரம் உண்டு என இந்நூல் வலியுறுத்துகிறது. இந்நூலின் நோக்கமும், குறிக்கோளும் அதுவே. ஆகமம் வேதாநுசாரி என்றும், வேதாநநுசாரி என்றும் இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. காமிகாதி28 ஆகமங்களும்வேதாநுசாரிகள். வாமபாசுபதாதி ஆகமங்கள் வேதத்திற்குப் புறம்பானதால் அதை வேதாநநுசாரிகள் என்று கூறுவார்கள். அவைகள் கௌதம முனி சாபத்திற்கு இலக்கானவர் அனுஷ்டிக்க கடவர். மேலும் காமிகாதி ஆகமங்கள் இருபத்தெட்டும் ச்ரௌதம் என்றும், வாம, பாசுபத, லாகுள, பைரவாதி ஆகமங்கள் அச்ரௌதம் என்றும் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இவ்விஷயம் ஸூதகீதையில் கூறப்பட்டுள்ளது.

"ச்ரௌதாச்ரௌததை விபேதேந த்விதஸ்து சிவாகம,
ச்ருதி ஸாரமயச்ச்ரௌத: ஸபுநர் த்விதொமத:"

காமிகாதி 28 ஆகமங்கள், வேத மார்க்கத்தைப் பின்பற்றுவதால் ஸ்வதந்திரம் என்றும், வாமாதி ஆகமங்கள் வேதாநநுசாரிகளாக இருப்பதால் அவைகள் அச்ரௌதம் என்றும் பாகுபாடு அடைந்தன. வேதத்திலும், ஆகமத்திலும் அதிகாரம்உடையவர் வேதாசாரத்தை

முன்னும், ஆகம ஆசாரத்தைப் பின்னும் அனுஷ்டிக்க வேண்டும். வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் விரோதம் கிடையாது. இக்கருத்தானது சைவ புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அஃது ஆவது

" வைதிகஸ்து புராக்ருத்வா, பச்சாது சைவம் சமாசரேது
ஜதி இதி வர்ணுச்ரமாசாராநு மநஸாபி நலங்கயேது "

என்று கூறப்பட்டமையால் வைதிகம், ஆகமம் இரண்டையும் கடைப்பிடிக்கிறவர்கள், வைதிக கர்மாவை முன்பும், ஆகமத்தைப் பின்பும் பின்பற்றவேண்டும். இதனால் வைதிக கர்மாவை (அதாவது வேதத்தில் கூறிய கர்மாவை) அனுஷ்டிக்க முடியாத நான்காம் வர்ணத்தவருக்கும், ஆகமத்தில் அதிகாரம் உண்டு எனவும், வேதாநுசாரிகளாக, சைவாகம ஆசாரியர்கள் அனுஷ்டிக்க தகுதி உடையவர்கள் எனவும் தெரிய வருகிறது. வேத நிந்தை செய்தல் கூடாது. அதே போல் ஆகமநிந்தையும் செய்யக்கூடாது. இன்னும் கூறப்போனல் வேதத்தைக் காட்டிலும் மிகவும்உத்கிருஷ்டமாக இருப்பதால், ஆகமநிந்தை செய்தாருக்கு ப்ராயச்சித்தம் இல்லை எனக் கூறப்படுகிறது. இவ்விஷயம் வாயுசம்ஹிதையில் கூறப்படுகிறது.

ஸுபரபேத ஆகமத்தில் இவ்விஷயம் நன்கு கூறப்பட்டுள்ளது. "யாதநாஸ்தா நமாச்ரித்ய பதந்தி நரகார்வை'' என்று மேலும் ஆகமப்ரமாணயத்தை நோக்குங்கால், சிஷ்டர்களான சநகாதி முனிவர்களாலும் ஆகமமானது அனுஷ்டிக்கப்பட்டு உள்ளது. இவ் விஷயம் உபதேச காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

" புராப்ரம்மாத்மஜா புண்யா ஸநகச்ச சநாதந:।
ஸநந்தநச்ச பகவாந் ஸநாதிபூர்வகுமாரக:॥

என்று கூறப்பட்டுள்ளது. இதனல் சனகாதி முனி சிரேஷ்டர்களும் இராமன், கண்ணன் முதலியவரும் சிவதீக்ஷை பெற்றுச் சிவாகம மார்க்கத்தால் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்தார்களெனப் புராணங்கள் பலவும் கூறுகின்றன.

சிலர் இராமன் முதலியவர்கள் சிவபூஜை செய்தது உண்மை, ஆனல் ஸ்மிருதி மார்க்கத்தைத் தழுவிச் செய்தார்கள் என்றும், ஆகம மார்க்கம் அல்ல என்றும் கருதுகிருர்கள். ஸ்மிருதியை அனுசரித்துச் செய்வது வைதீகம் என்றும், ஆகமத்தில் கூறியபடி செய்வது தாந்தீரிகம் என்றும் கூறப்படும். வைதிக முறைப்படிச் செய்வது தன் பொருட்டாகும். பிறர் பொருட்டு ஆகாது. தாந்திரிகமோவெனில் தன் பொருட்டும், பிறர்பொருட்டும் ஆகும்.

இராமன்முதலானோர் பூசித்த சிவமூர்த்தங்கள் அவர்களுக்குப் பலனை தந்ததுமல்லாமல் இன்றும் எல்லோரும் வழிபடுகிருர்கள். அதனல் இது தாந்திரிக பிரதிஷ்டையே எனக் கூறுகிருர் இந்நூல் ஆசிரியர் ஆகம ஆதாரத்துடன். ஆகையினல் வைதிகப்ரதிஷ்டையைக் காட்டிலும் தாந்திரிக (ஆகம) பிரதிஷ்டை சாலச் சிறந்தது. ஆகையினல் வைதிகம், தாந்திரிக பேதமாக இருவகைப்படும். இவ்வாறு வைதிகி, தாந்ரீக முறைகளைக்கூறி, அதற்கு யார் எதில் அதிகாரிகள் என்பதை மேலும் விளக்குகிருர்.

" வைதிகீ தாந்திரிகீசேதி த்விஜேந்திரா; தாந்திரீகீது சா:l
தாந்திரிகஸ்ய ஏவநாந்யஸ்ய வைதிகீ வைதிகஸ்ய ஹி "

என்று ஸூத சம்ஹிதையில் கூறியபடி ஆத்மார்த்தலிங்க பூஜையில் வைதீகருக்கும், ஆத்மார்த்த, பரார்த்த பூஜையில் ஆதிசைவருக்கும் அதிகாரம் உண்டு எனத் தெரியவருகிறது. மேலும், ஸூதஸம்ஹிதையில்

" தந்திரோக்தேன ப்ரகாரேண, தேவதாயா ப்ரதிஷ்டிதா,
ஸா ஸீவந்திரியா ஸீஸேவ்யாச வந்தநீயா சவைதிகை:"l

என்ற செய்யுளிலிருந்து ஆகமோக்த மார்க்கமாக எந்த தேவதைத் ப்ரதிஷ்டை செய்யப்படுகிறதோ, அது வைதிகர் முதலிய எல்லோராலும் வணங்கத் தகுந்தது என்று நமக்குத் தெரியவருகிறது. சிவாகம ப்ரதிஷ்டையின் உயர்வைப் பற்றி ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களும் சிவார்ச்சன சந்திரிகையில் நன்கு எடுத்துரைக்கின்ருர். இவரும் சிவாகம ப்ரதிஷ்டையர். அதிகாரம்உண்டு என நிச்சயமாக கூறுகிருர். ஆகையினல் வேதாநுசாரி ஆகமத்தினுடைய ப்ரமாண்யம் நிருபிக்கப்பட்டது.

இனி அந்த ஆகமங்களில் கூறப்பட்ட தீக்ஷாகார்யத்தில் அதிகாரத்தைப் பற்றி விளக்குகிருர்.

ஏன் என்ருல் யாதொரு தீக்ஷையானது செய்யப்படவில்லையோ, அது இல்லாமையால் எதிலும் அதிகாரம் இல்லை என்பதை மற்ற பல சான்றுகளுடன் கூறுகிருர்.

இவ்விஷயம் ஸ்ரீமத் பராக்யம் என்ற நூலில் இவ்வாறு கூறப் பட்டுள்ளது.

" தீக்ஷிதோ யோ அதிகாரீஸ்யாது
யோக்யாஸ்தா நார்ச்நா திஷ்வபி "

எந்த ஒரு அதிகாரி ஆனவர் தீக்ஷை செய்யப்பட்டவராக இருக்கிறாரோ, அவர் ப்ரதிஷ்டை, அர்ச்சனை முதலிய சகல கார்யங்களிலும் அதிகாரம் உடையவர் ஆகிறார் என்றுதெரிகிறது.

இந்த சிவதீக்ஷையே மோட்சமார்க்கத்தை அடைய விரும்புகிற வர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கவல்லது என தீக்ஷையின் முக்கியத்தை வலியுறுத்துகிறார். சற்றே, நாம் விரிவாகப் பார்க்க வேண்டிய இடமாக உள்ளது. இந்த தீக்ஷை,

" அத்வ சுத்தீம் விநா யேச முக்திமிச்சந்தி மநிவா: "

என்று தொடங்கி,

" ஷட்த்வ சுத்தியுக்தாத்மா முக்திமேதி நத்யான்யதா "ll

என்று இறுதியாகக் கூறப்பட்டதிலிருந்து அத்வ சுத்தி செய்து கொண்டவர்களுக்கு தீக்ஷையினால்தான் மோக்ஷமே அன்றி வேறு எந்தக் காரியத்தினாலும் இல்லை என்று நமக்கு உணர்த்துகிறது.

அந்த திட்க்ஷையோவெனில் நான்கு வர்ணத்தில் உள்ளவர் களுள் சமயாசார சமர்த்தரோ அல்லது அசமர்த்தர்களோ, மந்தன், குருடன், செவிகேளான், ஊமையாயினும் மலபரிபாக சத்தி நிபாதமுடையார்க்கே உரித்தது ஆகும். தீக்ஷை பெற்றவனே வீடு பேறடைவன்.

கர்பாதானாதி சம்ஸ்காரஸ்கள் த்விசாதி மூவர்ணத்தார்க்கே விதித்தனன், இந்த தீக்ஷையும் அவ்வாறுதான் நான்காம் வர்ணத் தாருக்கு விதிக்கவில்லை என்றால் அதற்கு (தீக்ஷை உண்டு என்பதற்கு) தகுந்த காரணம் கூறுகிறார். எந்த வர்ணத்தாராயினும் மலபரிபாகன் சத்திநிபாதமுடையார்க்கே செய்யப்படும். ஆன்ம சுத்தியாதலால் இது நான்காம் வர்ணத்தாருக்கும் உரிமை உண்டு. தீக்ஷை என்பது ஆன்மாவைக் குறித்துச் செய்யும் ஓர் காரியம். இவ்விஷயம் சிந்தாந்த சாராவளியின் உரையில் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

புரட்டாசி மாதச் சிறப்பு நாட்கள்

17— 9—88 சனி, சஷ்டி விரதம், அமுக்தாபரண சப்தமி.
18— 9—88 ஞாயிறு, ஜேஷ்டாஷ்டமி, லட்சுமி ஆவாஹனம்.
19— 9—88 திங்கள், வேளூர் கேதார கௌரீ விரத ஆரம்பம்.
21— 9—88 புதன், தருமை ஆதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை. ஸ்ரீ ஏனாதிநாத நாயனார் குருபூஜை.
22— 9—88 வியாழன், ஸர்வ, பரிவர்த்தன ஏகாதசி, விரதம்.
23— 9—88 வெள்ளி, பிரதோஷம்.
24— 9—88 சனி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம், அனந்தவிரதம், துலாயனம் 33-11. ஸ்ரீ நரசிங்கமுனையரையர் குருபூஜை.
25— 9—88 ஞாயிறு, பௌர்ணமி, விரதபூஜை, அபூபம் சாத்துதல் உமாமகேசுவர விரதம், தருமை, வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களில் நிறைபணி விழா.
26— 9—88 திங்கள், மஹாளயபக்ஷ ஆரம்பம்.
27— 9—88 செவ்வாய், ஸ்ரீ உருத்திரபசுபதி நாயனார் குருபூஜை.
28— 9—88 புதன், சங்கடஹரசதுர்த்தி, மஹாபரணி.
29— 9—88 வியாழன், கிருத்திகைவிரதம். வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.
30— 9—88 வெள்ளி, ஸ்ரீ திருநாளைப்போவார் குருபூஜை.
1—10—88 சனி, மஹாவியதீபாதம்.
2—10—88 ஞாயிறு, காளாஷ்டமி.
3—10—88 திங்கள், மத்யாஷ்டமி.
4—10—88 செவ்வாய், அவிதவாநவமி.
6—10—88 வியாழன், ஆயில்ய விழா.
7—10—88 வெள்ளி, சன்யஸ்த மகாளயம்.
8—10—88 சனி, மஹாபிரதோஷம். கஜச்சாயை, கலியுகாதி, ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் குருபூஜை.
9—10—88 ஞாயிறு, ஸஸ்திரஹதமகாளயம், வேளூர் கேதாரகௌரீ விரத பூர்த்தி. மாத சிவராத்திரி.
10—10—88 திங்கள், சர்வ மகாளய அமாவாசை, சோமவார பிரதக்ஷிணம். தருமை ஸ்ரீமகாலட்சுமி துர்க்காதேவிக்கு நவராத்திரி உற்சவ சதசண்டிஹோம பூர்வாங்கங்கள்.
11—10—88 செவ்வாய், நவராத்திரி பூஜாரம்பம், வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு முதலிய தலங்களில் பிரதி தினம் ஸ்ரீ அம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெறும். தருமை ஸ்ரீமகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டி யக்ஞாரம்பம்.
14—10—88 வெள்ளி, சதுர்த்தி விரதம், லட்சுமி ஆவாஹனம்.
16—10—88 ஞாயிறு, சஷ்டி விரதம், தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை சதசண்டி யக்ஞ சாலையில், மாலை வில்வ விருக்ஷாபிமந்திரணம்.

வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ
குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி

திருக்கோயிலில்

38 ஆவது சதசண்டி வேள்வி நிகழ்ச்சி

11—10—88 முதல் 20—10—88 வரை

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில்

காலை, மாலை சதசண்டி வேள்வி
சுவாசினி, குமாரி, வடு பூசை
சதுர் வேத பாராயணம்
துர்க்கா சூக்த பாராயணம்
திருமுறைப் பாராயணம்
அபிராமி அந்தாதி பாராயணம்
ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை
ஸ்ரீ வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு ஸகஸ்ரநாமார்ச்சனை
விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள்

19—10—88 புதன்கிழமை காலை

சப்தசதி ஹோமம்
மகாபூர்ணாகுதி சதசண்டி வேள்வி பூர்த்தி

20—10—88 வியாழக்கிழமை
ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு

யாக கலசாபிஷேகம்

குறிப்பு :— பாராயணம் காலை மாலை இருவேளைகளிலும் நிகழும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-9-88.